Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

MONDAY, JANUARY 30, 2023

திங்கட்கிழமை, ஜனவரி 30, 2023 | ஒளி: 08 கதிர் 197 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

எவருக்கும் தலைசாய்க்காமல்

# கடனற்ற பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதே நோக்கம்



அனுராதபுர இராஜ்ஜியத்தின் போது கடன் பெறாமல் பலமான பொருளாதாரத்தை கட்டியெழுப்பியது போன்று அடுத்த 05 முதல் 10 வருடங்களில் எவருக்கும் தலைசாய்க்காமல் பெருமையுடன் வாழக்கூடிய, கடனற்ற பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதே தமது நோக்கமாகும் என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

நாட்டின் வருமான நிலைமை ஸ்திரமாகி, பொருளாதார முன்னேற்றம் ஏற்பட்டால், இந்த வருடத்தின் மூன்றாம் காலாண்டில் அனைத்து அரச ஊழியர்களுக்கும் நிவாரணமாக மேலதிக கொடுப்பனவுகளை வழங்க எதிர்பார்த்துள்ளதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2

රජයේ ගැසට් පත්‍රය
Government Gazette
සිංහල / தமிழ்

சின்னத் தேர்தல் தொடர்பான

## வர்த்தமானியை அனுப்பவில்லை

உள்ளூராட்சி மன்ற தேர்தல் செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு தேவையான வர்த்தமானி அறிவித்தல், அரச அச்சக கூட்டுத்தாபனத்துக்கு அனுப்பிவைக்கப்படவில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



அம்பாறை, மட்டக்களப்புக்கு

## தேர்தல் பிரச்சார விஜயம் செய்கிறார் சஜித்

**வி.ரி. சகாதேவராஜா**

ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாச, அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களுக்கு செவ்வாய்க்கிழமை (31) தேர்தல் பிரச்சார விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார்.

தொடர்ச்சி P2

## குற்றப்பத்திரிகையை எதிர்கொள்ள ஆவல்



அமைச்சர் காஞ்சன விஜேசேகரவினால் தயாரிக்கப்பட்டதாகக் கூறப்படும் குற்றப்பத்திரிகையை எதிர்கொள்ள ஆவலுடன் காத்திருப்பதாக இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்தார்.

ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்கவை ஆணைக்குழுவின் தலைவர் பதவியில் இருந்து நீக்குவதற்கான குற்றப்பத்திரிகை தயாரிக்கப்பட்டு உள்ளதாகவும் விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் எனவும் அமைச்சர் காஞ்சன, ஞாயிற்றுக்கிழமை (29) காலை தெரிவித்திருந்தார்.

தொடர்ச்சி P2

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர்

## ஜனகவுக்கு எதிராக குற்றப் பத்திரிகை

**கடும் குற்றச்சாட்டுகளை முன்வைத்தார் அமைச்சர் காஞ்சன**

இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்கவை ஆணைக்குழுவின் தலைவர் பதவியில் இருந்து நீக்குவதற்கான குற்றப்பத்திரிகை தயாரிக்கப்பட்டு உள்ளதாகவும் விரைவில் அது பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்றும் மின்சக்தி மற்றும் வலுச்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

தொடர்ச்சி P2


தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர்களுக்கு

## வெளிநாட்டிலிருந்து கொலை மிரட்டல்

**சீ.ஐடியினரால் விசாரணைகள் ஆரம்பம்**

தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர்களுக்கு விடுக்கப்பட்ட கொலை மிரட்டல்கள் வெளிநாட்டிலிருந்து வந்தவை என்று தெரியவந்துள்ளதாகவும் அது குறித்து குற்றப் புலனாய்வு திணைக்களத்தினர் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸ் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## வங்காள விரிகுடாவில் தாழமுக்கம்

**இன்று முதல் கடும் மழை பெய்யும்**

தென்கிழக்கு வங்காள விரிகுடா கடற்பரப்புகளுக்கு மேலாக விருத்தியடைந்த குறைந்த அழுத்தப் பிரதேசம் தாழமுக்கமாக வலுவடைவதால்,

தொடர்ச்சி P2

மொழித் தகைமை பரீட்சை

## ஊக்குவிப்பு கொடுப்பனவுகள் புதிய திட்டத்துடன் திருத்தம்

தேசிய மொழித் தகைமை மதிப்பீட்டு பரீட்சையில் சித்தியடையும் அரச ஊழியர்களுக்கு மதிப்பெண் வழங்கும் திட்டத்துடன் ஊக்குவிப்பு கொடுப்பனவுகள் திருத்தப்பட்டுள்ளதாக திறைசேரி அண்மையில் வெளியிட்ட சுற்றறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

80 முதல் 100 மதிப்பெண்கள் பெறுபவர்களுக்கு ஒரு முறை ஊக்கத்தொகையாக 25 ஆயிரம் ரூபாயும் 65-79 மதிப்பெண்கள் பெறுபவர்களுக்கு 20 ஆயிரம் ரூபாயும் 50-64 மதிப்பெண்கள் பெறுவோருக்கு, 15 ரூபாய் வழங்கப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## பல நகரங்களிலும் காற்றின் தரம் குறைவு



இலங்கையின் பல நகரங்களில் காற்றின் தரம் குறைந்துள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் காற்று மாசு முகாமைத்துவப்பிரிவு தெரிவித்துள்ளது.

அமெரிக்க காற்று தரக் குறியீட்டுகக்கு அமைய இலங்கையின் பல நகரங்களில் காற்றின் தரம் 100 முதல் 150 வீதமாக பதிவாகியுள்ளதாக அந்த பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது.

தொடர்ச்சி P2

இலங்கை மனித உரிமைகள்

## ஆணைக்குழுவுக்கு எதிராக வழக்குத் தொடர தீர்மானம்



இலங்கையின் மனித உரிமைகள் உரிமைகள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கு எதிராக வழக்குத் தொடர இலங்கை அரசாங்கம் அசாதாரணமான முடிவை எடுத்துள்ளதாக அமைச்சர் காஞ்சன விஜேசேகர, ஞாயிற்றுக்கிழமை (29) அறிவித்தார்.

தொடர்ச்சி P2

சுதந்திர தினத்துக்கு முன்னர்

## வலிகாமம் வடக்கில் காணி கையளிக்கப்படும்



வலிகாமம் வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள பொதுமக்களின் காணிகளில் ஒரு பகுதி காணிகளை எதிர்வரும் 3ஆம் திகதி யாழ். மாவட்ட செயலகத்தில் கையளிப்பதற்குரிய ஏற்பாடுகள் இடம் பெற்று வருவதாக ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமும் கடற் தொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## மீண்டுமோர் ஏமாற்றத்தில் சிக்கிக் கொள்ளாதீர்கள்

ஒரு முறை அலைகளாலும் பொய்களாலும் ஏமாந்து இந்நாடு வங்குரோத்தானது எனவும், மீண்டும் ஏமாற்று காட்டி நாட்டை வங்குரோத்து செய்யும் அடுத்த கட்ட நடவடிக்கையை சிலர் ஆரம்பித்துள்ளதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, மீண்டும் ஓர் ஏமாற்றத்தில் சிக்கிக் கொள்ளாதீர்கள் என்று தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## இலத்திரனியல் கடவுச்சீட்டு இந்த ஆண்டு அறிமுகம்

இலத்திரனியல் கடவுச்சீட்டை இந்த ஆண்டு முதல் அறிமுகப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவித்த பொது பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், புதிய கடவுச்சீட்டில் ஒருவரின் அடிப்படை தகவல்களைக் கொண்ட இலத்திரனியல் அட்டை (சிப்) சேர்க்கப்படும் தெரிவித்தார்.



தொடர்ச்சி P2

## 13ஐ ஒழிப்பதே ஒரே வழி



அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தை சட்டத்தை முற்றாக இல்லாதொழிப்பதே ஒரே வழியாகும் என்று ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர, சட்டத்தை இல்லாதொழிக்க நடவடிக்கை எடுத்தால் தமது முழுமையான ஆதரவை வழங்குவதாகத் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# கடனற்ற பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதே நோக்கம்

அனுராதபுர வரலாற்று சிறப்புமிக்க ஜய ஸ்ரீ மஹா போதி மஹா விகாரையில் சனிக்கிழமை (28) பிற்பகல் ஸ்ரீ சன்னஸ் பத்திரம் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. இதில் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்த ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டதாவது,

நாட்டின் பொருளாதார நிலை எப்படி இருக்கிறது என்பதில் அனைத்து பொதுமக்களும், மதகுருமார்களும் கவனம் செலுத்துகிறார்கள். இந்த புரிதலுடன் நாம் எதிர்காலத்தில் பணியாற்ற வேண்டும்.

கடனை மீளச் செலுத்த முடியாதது தொடர்பாக கடந்த ஆண்டு ஏப்ரலில், சர்வதேசத்திற்கு அறிவித்தோம். நான் ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர் கடன் மறுசீரமைப்பது தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்திடம் கோரிக்கை விடுத்தேன்.

நாங்கள் பெற்ற கடன் தொகை அதிகமாக இருப்பதால் கடனை மீளச் செலுத்த முடியாது என அவர்களுக்கு அறிவிக்கப்பட்டது. கடனைத் திருப்பிச் செலுத்தும் வகையில், சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடி திட்டம் தயாரிக்க பரிந்துரைக்கப்பட்டது.

முதலில் சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடி திட்டம் தயாரிக்குமாறு, எமக்கு கடன் கொடுத்த சீனா, ஜப்பான், இந்தியா போன்ற நாடுகள் அறிவித்தன. அதன் பின்னர் அந்த நாடுகளினால் வழங்கக் கூடிய உதவிகள் குறித்து ஆலோசிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

எனவே, இந்தக் கடனை எவ்வாறு திருப்பிச் செலுத்துவது என்பது குறித்து சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாட வேண்டியிருந்தது. இந்த உதவி இல்லாமல் எமக்கு முன்னோக்கிச் செல்ல முடியாது. இந்த உதவி கிடைக்காவிட்டால், நமது பொருளாதாரம் வீழ்ச்சியடையும். எமது நாட்டில் உள்ள நிதியும், அந்நியச் செலாவணியும் போதுமானதாக இல்லை.

கடந்த ஆண்டு நமது பொருளாதார வளர்ச்சி விகிதம் 11 மறைப்பெறுமானமாக இருந்தது. இந்த ஆண்டு, திட்டமிட்டு செயற்பட்டால் அதனை மறை 3.5 ஆக குறைக்கலாம். உலகளாவிய பிரச்சினைகள் இருந்தால் அது மறை 4 ஆக இருக்கும். ஆனால் மறை 3.5மாக இருக்கும் என்றே எதிர்பார்க்கிறோம்.

2024ஆம் ஆண்டாகும் போது எமது பொருளாதாரத்தை முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியும். எங்களிடம் டொலர்கள் இல்லாத நிலையிலும் நாங்கள் எடுத்த நடவடிக்கைகளால் எங்களுக்கு சில உதவிகள் கிடைத்துள்ளன. எதிர்காலத்தில் இன்னும் பல உதவிகள் கிடைக்க இருக்கின்றன.

மேலும், தேவையான உரம் வழங்கப்படுவதால், இம்முறை பெரும்போகம் வெற்றியடைந்து நெல் மேலதிகமாக இருக்கும். இந்தத் திட்டத்தில் இருந்து விலகிச் சென்றால், கடந்த ஆண்டு மே, ஜூன், ஜூலை மாதங்களில் இருந்த நிலைமைக்கு நாடு செல்லும். அப்படி நடந்தால் மேலும் கஷ்டத்தை சந்திக்க வேண்டியிருக்கும். மூன்று வாரங்களுக்கு கூட மருந்து வாங்க எங்களிடம் பணம் இருக்காது.

தமது நாட்டு வருமானமும் குறைந்துள்ளதாகவும், இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான அதிகபட்ச சுமையை தமது மக்களால் சுமக்க முடியாவிட்டால், தமது ஆதரவை வழங்குவது கடினமாக இருக்கும் என எமக்கு கடன் வழங்கிய நாடுகள் தெரிவித்துள்ளன. ஏனென்றால் தங்கள் மக்களிடம் இருந்து வரி வசூலித்த பணத்தையே இவ்வாறு தந்திருப்பதாக அவர்கள் தெரிவித்தனர்.

2019ல் நமது மொத்த வருவாய், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 15% ஆகும். ஆனால் வரிக் குறைப்பினால், 2022ஆம் ஆண்டுக்குள் மொத்த வருமானம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 8.4% ஆகக் குறைந்துள்ளது. உதவி வழங்குவதாக இருந்தால் 2019 ஆம் ஆண்டு இருந்த நிலைக்கு மொத்த வருவாயை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 15% ஆக உயர்த்த வேண்டும் என்று அந்த நாடுகள் அறிவித்துள்ளன.

அதாவது தற்போதைய வருமானம் 03 வருடங்களில் 75% ஆக அதிகரிக்கப்பட வேண்டும். அதுதான் எங்களுக்கு இருக்கும் சவால். அப்படிச் செய்யாவிட்டால் நமக்கு உதவி கிடைக்காது. அப்படிச் செய்தால் பெரும் சுமையைச் சுமக்க வேண்டியிருக்கும். ஆனால் நாம் முன்னோக்கிச் செல்ல வேண்டும். அவர்கள் முன்வைக்கும் விடயங்களை வைத்து நாம் வாதிடுவது கடினமானது.

இந்த நிலைமையை மேலும் விளக்குவதாக இருந்தால், 2019 இல் 15 இலட்சம் வருமான வரி தொடர்பான கோப்புகள் இருந்தன, அது தவிர வெட் வரி மற்றும் தேசத்தை அபிவிருத்தி செய்யும் வரி ஆகியவற்றை செலுத்துபவர்கள் தொடர்பான ஒரு இலட்சத்து இருபத்தி இரண்டாயிரம் கோப்புகள் இருந்தன.

மொத்தம் 16 லட்சம் கோப்புகள் இருந்தன. இந்த வரிகள் நீக்கப்பட்டதன் மூலம், 2021 டிசம்பர் மாதத்தில் வருமான வரி செலுத்தும் 04 லட்சம் கோப்புகள் எங்களிடம் இருந்தன. 15 இலட்சத்தில் இருந்து 04 இலட்சமாக இது குறைந்துள்ளது.

மேலும், ஏனைய வரி செலுத்தும் கோப்புகள் ஒரு இலட்சத்து 22,000 இருந்து 9,976ஆக குறைந்துள்ளது. அந்த வகையில் எங்களிடம் இருந்த வரிக் கோப்புகள் 16 லட்சத்தில் இருந்து 04 லட்சமாக குறைந்துள்ளது. அதன்படி, இந்த வரிகளை வசூலிப்பதைக் குறைத்து, எங்கள் மக்களிடம் இருந்து வசூலிக்க வேண்டிய வரியை உங்களுக்கு எப்படித் தர முடியும் என அந்த நாடுகள் எம்மிடம் வினவின.

அதன்படி, இந்த வரி விதிப்பை தற்போதைய நிலைக்குக் கொண்டு வர நடவடிக்கை எடுத்தோம். இந்த நடவடிக்கையை மேற்கொள்ளாமல் எமக்கு முன்னேற முடியாது.

2023 ஜனவரி 25 ஆம் திகதியன்று எங்களுக்குக் கிடைத்த வருமானம் 145 பில்லியன் ரூபா. சம்பளம், ஓய்வூதியம் மற்றும் சமுர்த்தி உட்பட அனைத்து மூலதனச் செலவினங்களுக்கும் 143 பில்லியன் செல்கிறது. மேலும், கடனை செலுத்த இன்னும் 355 பில்லியன்கள் தேவைப்படுகிறது.

ஜனவரி மாதத்தில் எங்களின் மொத்தச் செலவு 498 பில்லியன் ரூபாவாகும். ஆனால் எங்களின் வருமானம் 145 பில்லியன். முறையான திட்டமொன்று செயல்படுத்தப்பட்டால், காலப்போக்கில் இந்த சூழ்நிலையில் இருந்து மீள்வதற்கான திறன் நமக்கு இருக்கிறது.

மேலும் சில பிரச்சினைகள் உள்ளன. 2022 ஆம் ஆண்டில் அரசு நிறுவனங்களின் நஷ்டம் 794 பில்லியன் ஆகும். அவற்றைச் செலுத்த இந்த ஆண்டு எங்களிடம் பணம் இல்லை. எனவே இந்த இழப்பை ஈடு செய்ய வேண்டும். இன்று மின்கட்டண பிரச்சினை அனைவரையும் பாதித்துள்ளது.

வரி வருவாயைப் பெறாவிட்டால், ஏனைய நாடுகளின் வரி வருவாயை வழங்க முடியாது என்று சர்வதேச நாணய நிதியம் எங்களுக்குத் சுட்டிக்காட்டியுள்ளது. அவர்கள் இன்னொரு விடயத்தையும் சுட்டிக் காட்டினார்கள். நம் நாட்டில் கூடுதலாக வரிச் செலவுகள் பொதுமக்கள் மீது தான் ஏற்றப்படுகிறது. தாய்லாந்து போன்ற நாடுகளில், அரசின் வருவாயில் 2.8% தான் தீர்வைவரி மூலம் கிடைக்கிறது. 30.1% வருமான வரியிலிருந்து பெறப்படுகிறது.

இந்தியா தீர்வை வரிகளிலிருந்து 4.5% மற்றும் வருமான வரியிலிருந்து 45.6% மும் பெறுகிறது. நமது நாடு தீர்வை வரியிலிருந்து 26.3% மற்றும் வருமான வரியிலிருந்து 17.7% பெறுகிறது. எனவே, வரிகளை உயர்த்தும் போது, வருமான வரியை உயர்த்த வேண்டும் என்றும்,ஏனைய வரிகளை வசூலிப்பதால், குறைந்த வருமானம் பெறும் மக்கள் சிரமத்திற்கு உள்ளாவார்கள் என்றும், சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

நாம் அனைவரும் கடினமான சூழ்நிலையில் இருக்கிறோம் என்பதை ஒப்புக்கொள்கிறேன்.

இம்முறை பெரும்போகத்தில் விவசாயிகளுக்கு சிறந்த அருவடை கிடைக்க நடவடிக்கை எடுத்துள்ளோம். பொருட்களின் விலை உயர்வு, போக்குவரத்து செலவு, எரிபொருள் விலை உயர்வு போன்றவற்றால் ஏற்படும் அழுத்தத்தை அனைவரும் தாங்கிக் கொண்டிருக்கிறோம். இதிலிருந்து நாம் ஒதுங்கிவிட முடியாது.

நமது வருமானம் ஒரு நிலையான நிலைக்கு வந்தால், அது மேலும் அதிகரிக்குமாக இருந்தால், இந்த ஆண்டின் மூன்றாம் காலாண்டில் அனைத்து அரசு ஊழியர்களுக்கும் அதிக கொடுப்பனவுகளை நிவாரணமாக வழங்க முடியும் என்று எதிர்பார்க்கிறேன். நமது பொருளாதாரம் மேம்படும்போது சம்பளமும் அதிகரிக்க வேண்டும். லாபத்தை அதிகரிக்க வேண்டும்.

இந்த உண்மைகளை ஒரு அரசியல்வாதியாக பேசுவது கடினமான பணி. ஆனால் நான் வென்றாலும் தோல்வியடைந்தாலும் நான் எப்போதும் உண்மையை சுட்டிக் காட்டுவேன். இந்த இக்கட்டான சூழ்நிலையில் இருந்து மீள்வதற்கு பாராளுமன்றத்தின் ஆதரவரவை வழங்க வேண்டும் என அனைவரிடமும் கேட்டுக்கொள்கின்றேன்.

ஜப்பான் உள்ளிட்ட பாரிஸ் மாநாட்டின் நாடுகள் எங்களின் முன்மொழிவுகளை ஏற்று அது தொடர்பில் ஆராய்ந்துள்ளன. அதே போன்று இந்தியாவுடனும் கலந்துரையாடப்பட்டது.

தற்போது அந்த முன்மொழிவை சீனா ஏற்றுக்கொண்டுள்ளது.

பெப்ரவரி மாதமளவில் இந்த நிலைமையுடன் நமக்கு அந்நிய செலாவணி கிடைக்கும். அப்போதுதான் இந்தப் பிரச்சினைகளை முறையாகத் தீர்க்க முடியும். புதிய பொருளாதாரத்தை உருவாக்க வேண்டும். அனுராதபுர இராச்சியம் கடன் பட்டிருக்கவில்லை. ஒரு வலுவான ராஜ்ஜியமாக இருந்தது.

அதை மனதில் வைத்து பொருளாதாரத்தை கட்டியெழுப்ப வேண்டும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

## வர்த்தமானியை அனுப்பவில்லை

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் மற்றும் ஏனைய உறுப்பினர்களின் கையொப்பத்துடன் குறித்த வர்த்தமானியானது அச்சகக் கூட்டுத்தாபனத்துக்கு இதுவரை கிடைக்கவில்லை என்று அரசாங்க தகவல் திணைக்களம், ஞாயிற்றுக்கிழமை (29) அறிவித்தது.

அரசாங்க தகவல் திணைக்களத்தின் அரச செய்தி பணிப்பாளர் நாயகம் சிந்தன கருணாரத்னவின் கையொப்பத்தில் இந்த விசேட அறிவித்தல் வெளியிடப்பட்டது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் எதிர்வரும் மார்ச் மாதம் 9ஆம் திகதி நடைபெறும் என ஆணைக்குழு ஏற்கனவே அறிவித்திருந்த போதிலும், அது தொடர்பான வர்த்தமானி இதுவரை வெளியிடப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## தேர்தல் பிரச்சார விஜயம் செய்கிறார் சஜித்

அதனையொட்டி "தீர்வற்ற நாட்டுக்கு தீர்வு"என்ற மகுடத்தின் கீழ் "மாற்றத்துக்கான முதல் சந்திப்பு திருக்கோவிலில் "என்று குறிப்பிடப்பட்ட பதாகைகள் பரவலாக ஒட்டப்பட்டுள்ளன.

ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் அம்பாறை மாவட்ட அமைப்பாளர் வெள்ளையன் வினோகாந்தின் அழைப்பு ஏற்று அவர் நாளை காலை 9:00 மணிக்கு பொத்துவில் கோமாரி பிரதேசத்தில் தமிழ் வேட்பாளர் மற்றும் ஆதரவாளர்கள் மக்கள் சந்திப்பை நடத்துகின்றார்.

## ஊக்குவிப்பு கொடுப்பனவுகள்...

முன்னதாக, 1 முதல் 4 வரையிலான தேர்ச்சி நிலைகளில் தேர்ச்சி பெறும் உத்தியோகத்தர்கள் எழுத்து மற்றும் வாய்மொழி பரீட்சைகளில் தேர்ச்சி பெற்றால் 15,000 முதல் 25,000 ரூபாய் வரையிலான கொடுப்பனவுகளைப் பெற முடியும்.

புதிதாக திருத்தப்பட்ட சுற்றறிக்கையின் கீழ், 2013 ஜூலை 1ஆம் திகதியில் இருந்து ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட மற்றும் பொருத்தமான மொழிப் புலமை நிலைகளை பூர்த்தி செய்யத் தவறிய அரச ஊழியர்கள் மூன்று ஆண்டுகளுக்குள் தமிழ் அல்லது சிங்களம் ஆகிய மற்ற உத்தியோகபூர்வ மொழிகளில் தகுதியின் அளவைப் பெற வேண்டும்.

குறிப்பிட்ட காலத்தின் இறுதிக்குள் மொழித் தகைமையை பூர்த்தி செய்யாத அதிகாரிகளுக்கு, அவர்கள் நிர்ணயிக்கப்பட்ட தகைமையை பூர்த்தி செய்யும் வரை வழங்கப்பட வேண்டிய சம்பள உயர்வு சந்தேகிக்கத்துக்குரியது என்று சுற்றறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஜனகவுக்கு எதிராக குற்றப் பத்திரிகை

கொழும்பில் ஞாயிற்றுக்கிழமை (29) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆணைக்குழுவின் தலைவருக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கவும் அவரை நீக்குவதற்காக குற்றப்பத்திரிகையும் தயாரிக்கப்பட்டு அதற்கு ஆளும் கட்சியின் அனைத்து எம்.பிக்களும் இணக்கம் தெரிவித்துள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

எதிர்வரும் பெப்ரவரி 8ஆம் திகதி பாராளுமன்ற கூட்டத்தொடர் ஆரம்பித்ததும் ஒழுங்குமுறைகளுக்கு அமைய அவரை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். ஆணைக்குழுவின் தலைவராக நியமிக்கப்படுவதற்கு முன்னர், தம்மை கொமர்ஷல் வங்கியின் தலைவராக நியமிக்குமாறு அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் ஜனக ரத்நாயக்க கோரியிருந்ததாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

## பல நகரங்களிலும் காற்றின்...

இந்த நிலைமையானது அடுத்த சில தினங்களுக்கும் தொடர்ந்தும் காணப்படும் எனவும் எதிர்வரும் மார்ச் மாதம் வரை இந்த நிலைமையானது குறைவாக அல்லது அதிகமான நிலையில் நீடிக்கலாம் எனவும் காற்று மாசு முகாமைத்துவப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

## ஆணைக்குழுவுக்கு எதிராக வழக்குத்...

மனித உரிமைகள் ஆணைக்குழு வளாகத்துக்கு அழைக்கப்பட்ட அதிகாரிகள் தடையில்லா மின்சாரம் வழங்க சம்மதிக்க கையொப்பமிடவில்லை என்றால் சட்ட நடவடிக்கை மற்றும் சிறை தண்டனை விதிக்கப்படும் என்று மிரட்டப்பட்டதாக அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இந்த நடவடிக்கையில் ஈடுபட்ட மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கு எதிராக நிச்சயமாக நீதிமன்றத்தில் நடவடிக்கை எடுப்போம் என்றும் அமைச்சர் விஜேசேகர அறிவித்துள்ளார்.

அரசுக்குச் சொந்தமான மின்சார நிறுவனமான இலங்கை மின்சார சபை, கிட்டத்தரட்ட 2 வார காலப்பகுதியில் மின்வெட்டை அமுலாக்கக் கூடாது என்ற மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உத்தரவை மீறி செயல்பட்டு வருகிறது.

பல்கலைக்கழக அமைப்பில் நுழைவதைத் தீர்மானிக்கும் மிக முக்கிய பரீட்சையான உயர்தரப் பரீட்சைகளுக்கு 300,000 க்கும் அதிகமான பரீட்சார்த்திகள் தோற்றுகின்றனர். மின்வெட்டு அமுல்படுத்துகின்றமை அவர்களின் உரிமைகளை மீறும் செயல் எ ஆணைக்குழு அறிவித்தது.

கடந்த வாரம் இடம்பற்ற

## வலிகாமம் வடக்கில் காணி கையளிப்பு

அவர் மேலும் தெரிவிக்கையில், வலி. வடக்கில் சுமார் 2 ஆயிரத்து 300 ஏக்கருக்கு மேற்பட்ட தனியார் காணிகள் பாதுகாப்பு தரப்பினரிடம் உள்ள நிலையில் அதன் ஒரு பகுதி காணிகளை பாதுகாப்பு தரப்பு இவ்வாறு கையளிக்கவுள்ளது.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற பொங்கல் நிகழ்வுக்காக வருகை தந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, வலி. வடகில் உள்ள தனியார் காணிகளை பகுதி பகுதியாக விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்தார்அ

தன்பின் யாழ். மாவட்ட செயலகத்தில் ஜனாதிபதி செயலக அதிகாரிகள் மற்றும் மாவட்ட உயர் அதிகாரிகளுக்கு இடையிலான கலந்துரையாடல் இடம்பெற்றது.

கலந்துரையாடலின் பின்னர் உயர் பாதுகாப்பு வலையக் காணிகள் மற்றும் வன ஜீவராசிகள் திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் உள்ள காணிகள் தொடர்பில் ஜனாதிபதி செயலக அதிகாரிகள் கள விஜயத்திலும் ஈடுபட்டனர்.

## மீண்டுமோர் ஏமாற்றத்தில் சிக்கிக் கொள்ளாதீர்கள்

அம்பலாந்தோட்டையில் சனிக்கிழமை (28) இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு டொலர்கள் இன்றியமையாதது எனவும், அதற்கான விசேட திட்டமொன்று தேவைப்படுவதாகவும் குறிப்பிட்டார்.

நிதியில்லை, வேலை செய்ய முடியாது, நாடு வங்குரோத்தாகி விட்டது என்று அரசாங்கம் சாக்குப்போக்கு தேடும் வேளையில், ஐக்கிய மக்கள் சக்தி சம்பிரதாய எதிர்க்கட்சியின் வகிபாகத்திலிருந்து விடுபட்டு நாட்டுக்கு பெறுமானத்தைச் சேர்த்ததாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

சிலர் 74 வருட வரலாற்றை குறை கூறி குற்றம் சுமத்தி வருகின்ற போதிலும், அவ்வாறு கூறும் தரப்பினரும் இந்நாட்டு அரசாங்கங்களில் அமைச்சர்களாகவும் பிரதியமைச்சர்களாகவும் கடமையாற்றியுள்ளதை எதிர்க்கட்சித் தலைவர் நினைவு கூர்ந்தார்.

## இலத்திரனியல் கடவுச்சீட்டு...

இந்த முறையை உலகின் பெரும்பாலான நாடுகள் பயன்படுத்துவதாகவும் கூறிய அவர், குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் பணிச்சுமையை குறைக்கும் வகையில், திணைக்கள தலைமை அலுவலகம் மற்றும் தற்போதுள்ள நான்கு பிரதான கிளைகள் தவிர்ந்த 54 கிளைகள் நாடு முழுவதும் நிறுவப்படும் என்றார்.

இதேவேளை, 50 பிரதேச செயலகங்கள் உள்ளிட்ட 54 கிளைகளில் இணையவழியில் கடவுச்சீட்டுகளை பெற்றுக்கொள்ளத் தேவையான வசதிகள் வழங்கப்பட்டுள்ளதாக குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

இணையவழியில் விண்ணப்பங்களை சமர்ப்பித்து, உரிய பிரதேச செயலகங்களில் கைவிரல் அடையாளத்தை வழங்கி, மூன்று நாட்களுக்குள் கடவுச்சீட்டை பெற்றுக்கொள்ள முடியும் என்றும் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இணையவழியில் விண்ணப்பங்களை சமர்ப்பித்து பிரதேச செயலகங்கள் மற்றும் வவுனியா, கண்டி, மாத்தறை, குருநாகல் ஆகிய பிரதான கிளைகளில் 3 நாட்களுக்குள் அவசர சேவையின் ஊடாக கடவுச்சீட்டுகளை பெற்றுக்கொள்ள முடியும் .

## வங்காள விரிகுடாவில் தாழமுக்கம்

நாடு முழுவதும் இன்று (30) முதல் மழை நிலைமை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் உயர்வாகக் காணப்படுகின்றது என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

ஜனவரி 31 ஆம் திகதி மற்றும் பெப்ரவரி 01ஆம் திகதிகளில் நாடு முழுவதும் பல இடங்களில் 150 மில்லி மீற்றர் அளவான மிகப் பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது என்றும் திணைக்களம் தெரிவிக்கிறது.

## வெளிநாட்டிலிருந்து கொலை மிரட்டல்

எஸ்.பி. திவாரத்ன, கே.பி.பி. பத்திரன மற்றும் எம்.எம். மொஹமட் ஆகிய உறுப்பினர்களுக்கு தமது பதவிகளை இராஜினாமா செய்யுமாறு தொலைபேசியில் எச்சரித்து கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் மூவரின் வீடுகளுக்கு ஆயுதம் ஏந்திய பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

சீ.ஐ.டியினர் மேற்கொண்ட விசாரணைகளில், காலி பிரதேசத்தில் வசிக்கும் ஒருவரின் பேரில் குறித்த இலக்கம் பதிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

## 13ஐ ஒழிப்பதே ஒரே வழி

13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் அவ்வாறு செய்யாவிடின் 22 ஆவது திருத்தத்தை கொண்டுவந்து 13ஐ இல்லாமல் ஒழிக்க வேண்டும் என்றும் இரண்டில் ஒன்று நடக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சர்வகட்சி கூட்டத்தில் அறிவித்திருந்தார்.

இந்நிலையில், ஜனாதிபதியின் அறிவிப்பு குறித்து கருத்து வெளியிடுகையிலேயே சரத் எம்.பி மேற்குறிப்பிட்ட விடயத்தை தெரிவித்தார்.

## குற்றப்பத்திரிகையை எதிர்கொள்ள ஆவல்

எதிர்வரும் பெப்ரவரி 17ஆம் திகதியன்று உயர்தர பரீட்சை முடியும் வரை தடையில்லா மின்சாரம் வழங்குவது தொடர்பில் ஆணைக்குழு விடுத்த கோரிக்கையை இலங்கை மின்சாரசபை செயற்படுத்தத் தவறியுள்ளது.

இந்நிலையில், மின்சாரசபைக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க அறிவித்துள்ளார்.

இதனையடுத்து, ஆணைக்குழுவின் தலைவருக்கும் வலுச்சக்தி அமைச்சருக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது.

# வேறுவழிகளில் மகிழ்ச்சிப்படுத்துங்கள்


சதங்கனி சண்முகம்
நான்காம் வருடம்
ஊடகக் கற்கைகள் துறை
யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம் )

அன்றொருநாள் மாலைநேரம் வீதியால் நடந்து சென்றுகொண்டிருந்தேன். திடீரென சோவென மழை பெய்யத் தொடங்கியது. நனையாமல் இருக்க வீதியோரத்தில் இருந்த சங்கக்கடையில் ஒதுங்கி நின்றேன். அங்கே என்னைப் போன்று மழைக்கு ஒதுங்கிய சிலரும் மாலைப் பொழுதைக் கழிக்க வரும் சிலரும் நின்றனர். அவர்களில் ஒரு வயதானவரும் ஒரு நடுத்தர வயதுடையவரும் ஏதோ முணுமுணுத்துக் கொண்டிருந்தனர். அவர்களின் கதை எனது காதிலும் எட்டியது. 'தம்பி நேற்று என்ர பேத்தியின்ர முதலாவது பிறந்தநாள் தெரியும் தானே ஆனால் நீ வரேலை அங்க பெரிய பெரிய சம்பவமெல்லாம் நடந்தது, நீ ஒண்டும் கேள்விப்படேலையா?' அப்பிடி என்ன நடந்தது? என்று கேட்க முதியவர் பதிலளித்தார்.

'ஒரு வாகனத்தில அஞ்சாறு பேர் வந்திறங்கி முகமூடி எல்லாம் அணிந்து கொண்டு எங்கட அந்த மெயின் றோட்டில இருந்து பாடலைப் போட்டு ஆடி ஆடி வந்திச்சினம். பிறகு பேர்த்திக்கு நிறைய பரிசுகள் கொடுத்தார்கள், வெளிநாட்டில இருக்கிற என்ர மகன் அனுப்பி விட்டதாம், என்று சொன்னாரகள், அதை வேறோர் ஆள் படம் எடுக்கிறார். நான் திகைத்துப் போனன்.' என முதியவர் கூற 'ஓம் அண்ணை இப்ப இதுதான் பெசன். இதெல்லாம் தேவை இல்லாத காசக் கரியாக்குற வேலை தான்' என இவர்களுடைய உரையாடல் தொடர்ந்து கொண்டிருந்தது மழையும் விட்டது நானும் சங்கக்கடையை விட்டு வெளியேறி இதைப்பற்றி சிந்தித்த வண்ணம் வீடு நோக்கி நடந்தேன்.

தொழில்நுட்ப வளர்ச்சியினால் உலகம் சுருங்கி உள்ளங்கைக்குள் அடங்கி விட்டது. தொடர்பாடல் விருத்தியடைந்து உலகின் ஒவ்வொரு மூலையில் இருப்பவரும் இணையவெளியில் உறவாடுகின்றனர். இவற்றோடு வியாபாரமும் விளம்பரப்படுத்தலும் வளர்ச்சியடைந்து மனித வாழ்வியலையே மாற்றி விட்டன. இதில் ஒன்று தான் அண்மைக்காலமாக அதிகரித்து வரும் புதுவகை வியாபாரம் 'சப்பிரைஸ் கிப்ற் டெலிவரி' ஆகும்.

அதாவது பிறந்தநாள், திருமணநாள், பூப்புனித நீராட்டு விழா, பண்டிகைகள், நண்பர்கள் தினம், காதலர் தினம் போன்ற சிறந்த தினங்கள் மற்றும் வீடுகளில் இடம்பெறுகின்ற சந்தோசமான தருணங்கள் எல்லாவற்றிலும் இந்த ஆச்சரியமான பரிசுப்பொருள் விநியோகச் செயற்பாடு இடம்பெறுகின்றது. இதிலும் குறிப்பாக பிறந்தநாள் கொண்டாட்டங்களில் தான் இதை




அதிகம் காணமுடிகின்றது.

அதாவது ஆடல் பாடல் பரிசுப்பொருட்கள் என உள்நாட்டில் இருக்கும் உறவுகளை சந்தோசப்படுத்துவதற்காக வெளிநாட்டில் இருக்கும் அதிகமானவர்களால் இங்கு இயங்கும் சப்பிரைஸ் கிப்ற் டெலிவரி முகவர்களின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. இதனால் இங்கு பல முதலாளிகளும் உருவாகிவிட்டனர்.

அதாவது பரிசுப்பொருட்களைப் பரிமாறுவது என்பது சந்தோசமான ஒரு செயற்பாடாகும். அதிலும் ஆச்சரியமாக வழங்குவது என்பது அதிக சந்தோசத்தை ஏற்படுத்தும் என்பதை அறிந்த இன்றைய சமூகத்தினர் இதனை ஒரு வியாபாரமாக மாற்றி அதிகமாக உழைக்கின்றனர்.

இந்த விநியோகத்தை மேற்கொள்ளும் முதலாளிகள் இந்த நிகழ்வுகளை காணொளிகளாகவும் புகைப்படங்களாகவும் பதிவு செய்து சமூகவலைத்தளங்களில் பதிவேற்றம் செய்து தமது வியாபாரத்திற்கான விளம்பரப்படுத்தலை மேற்கொள்கின்றனர். அத்துடன் இந்தப் பரிசுப்பொருள் விநியோகத்திற்காக கொள்வனவு செய்யப்படும் பரிசுப் பொருட்களுக்குமான விளம்பரப்படுத்தலும் இங்கு அதிகமாக இடம்பெறுகின்றது. விளம்பரப்படுத்தலுக்குள் அகப்பட்ட மக்கள் மேலும் இவ்வாறான செயற்பாட்டைச் செய்யத் தூண்டப்படுகின்றனர்.

அதாவது வெளிநாடுகளில் இருப்பவர்கள் மத்தியில் இவ்வாறு பரிசுப் பொருட்களை அனுப்புவதென்பது இன்றியமையாத ஒரு கலாசாரமாக மாறிவிட்டது. வெளிநாடுகளில் இருப்பவர்கள் மத்தியில் இவ்வாறு பரிசுப் பொருட்களை அனுப்புபவர்கள், அனுப்பாதவர்களை தாழ்வாக மதிக்கின்ற தன்மையும் ஏற்பட்டுள்ளதாக வெளிநாடுகளில் உள்ளவர்கள் குறிப்பிடுகின்றனர்.

அத்துடன் இலங்கையில் இருக்கின்ற மக்கள் மத்தியிலும் மிகப்பெரிய எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. அதாவது சிறுவர்கள் முதல் பெரியோர்கள் வரை அனைவரையும் இந்த எதிர்பார்ப்பு விட்டுவைக்கவிலலை. இதனால் தங்களுக்கும் இவ்வாறான பரிசுப்பொருட்கள் வரும் என்ற எதிர்பார்ப்பில் இருக்கின்றனர் இந்த எதிர்பார்ப்பு நிறைவேறாத சந்தர்ப்பங்களில் உறவுகளுக்கிடையில் விரிசல் ஏற்படுகின்ற நிலையும் உருவாகியுள்ளது.

மேலும் இன்றைய போட்டித்தன்மை மிகுந்த உலகில் வேலைவாய்ப்பினைப் பெற்றுக்கொள்வது என்பது மிகவும் கடினமானதாகும். அவ்வாறு வேலை கிடைத்தாலும் உழைப்பிற்கேற்ற ஊதியம் கிடைப்பதில்லை. ஆனால் இத்தொழிலானது இன்று அதிகமானோர் பிரதான தொழிலாகவும் பகுதிநேரத் தொழிலாகவும் மேற்கொள்கின்றனர். இத்தொழிலை ஆரம்பிப்பதற்கு வரையறைகளோ சட்டதிட்டங்களோ இல்லை. இதன் செல்வாக்கிற்கும் நிலைத்திருப்பிற்கும் காரணம் அதிகளவான இலாபத்தை ஈட்டிக் கொள்ளுதலாகும்.

மேலும் வியாபார நோக்கத்தை கொண்டு இயங்கும் இந்த நிறுவனங்கள் எந்தக் காலகட்டத்தில் அதிக தொழிலையும் இலாபத்தையும் பெற்றுக் கொள்ளலாம் என்பது பற்றி விழிப்புடன் இருக்கின்றன. அதாவது தனிப்பட்ட நிகழ்வுகளை விட பொதுவான தினங்களில் அதிக இலாபத்தைப் பெற்றுக் கொள்ளலாம் என்பதை அறிந்து பல்வேறு வியாபார உத்திமுறைகளைக் கையாண்டு செயற்படுகின்றன.

அதாவது பெப்ரவரி 14ஆம் திகதி காதலர் தினமாகும். இதனை இலக்கு வைத்து ஜனவரி மாத ஆரம்பத்திலிருந்து இதற்கான விளம்பரப்படுத்தலை மேற்கொள்ள தொடங்கி விட்டன. இதற்காக சிறப்பான பரிசுப் பொருட்கள், கட்டணக்கழிவுகள், இலவச விநியோகம் போன்ற சலுகைகள் என்பவற்றை வழங்கி வாடிக்கையாளர்களைத் தம்வசம் ஈர்க்கின்றன.

முதலாளித்துவத்தின் உழைப்புச் சுரண்டலே இங்கும் இடம்பெறுகின்றது. கையில் நல்ல ஒரு தொலைபேசியும் கொஞ்சம் கதைக்கவும் தெரிந்தால் கஸ்ரப்படாமல் நிறைய சம்பாதிக்கலாம் என்ற எண்ணத்தை மக்கள் மத்தியில் தோற்றுவித்துள்ளது இந்த தொழில்.

நாகரிக மோகத்தில் நசுங்குண்டு போயுள்ள இன்றைய சமூகம் புகழ்ச்சியை மட்டுமே எதிர்பார்த்து நிற்கின்றது. அன்பை வெளிப்படுத்தவும் உறவுகளைச் சந்தோசப்படுத்தவும் சிறந்த செயற்பாடு இதுதான் என்ற கருத்தியலை சமூகத்தில் ஏற்படுத்தியுள்ளது. இவற்றுக்கு மத்தியில் பணத்தை ஒரு பெரிய விடயமாக கருதாமல் சுளையாகக் கொட்டுகின்றார்கள். முதலாளிகளும் பணத்தை இலகுவாகக் கொள்ளையடிக்கின்றார்கள். ஐயாயிரம் ரூபா பெறுமதியான பொருளினை வழங்க பொதியிடல் செலவு, விநியோகச் செலவு, காணொளி எடுப்பதற்கான செலவு, ஆடல் பாடல் குழுவினருக்கான செலவு என ஐம்பதாயிரம் ரூபாவை வாங்குகின்றார்கள்.

இது இவ்வாறிருக்க உறவுகளை மகிழ்ச்சிப்படுத்த நிகழ்வுகளை சிறப்பிக்க இன்னும் எத்தனையோ வழிகள் இருக்கின்றன. இன்றைய பொருளாதார நெருக்கடி மிகுந்த காலகட்டத்தில் ஒருவேளை உணவுக்காகப் போராடும் எத்தனையோ மனிதர்கள் எமது சமூகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். முதலாளி வர்க்கத்தினர் சுரண்டும் பணத்தை இவர்களுக்கு வழங்கினால் யாரோ சிலரின் வயிற்றுப்பசியைப் போக்க முடியும். ஆரோக்கியமான அடுத்த சந்ததியை உருவாக்க முடியும்.

அன்று தொடக்கம் இன்று வரை எமது சமூகத்தின் உழைப்பை யாரோ ஒருவர் சுரண்டிக் கொண்டிருக்கின்றனர். இன்றே சிந்தியுங்கள் முதலாளித்துவத்தின் உழைப்புச் சுரண்டலுக்கு முற்றுப்புள்ளி வையுங்கள். பொருளாதார பயன்தராத இதுபோன்ற காரியங்களில் ஈடுபடாமல் வேறுவழிகளில் உறவுகளை மகிழ்ச்சிப்படுத்துங்கள்.





# "எம்மிடம் மட்டுமே உள்ளது"

## அனுர எம்.பி தெரிவிப்பு



நாட்டை பேரழிவில் இருந்து மீட்டு எடுக்கும் ஆளுமையும் நோக்கமும் தேசிய மக்கள் சக்திக்கு மாத்திரமே உள்ளதாக அதன் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அனுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

இயலுமையை நன்கு அறிந்து அதற்கு அமைவாக செயற்படுவதே அரசாங்கத்தின் பிரதான நோக்கமாக இருக்க வேண்டும் அதனையே தேசிய மக்கள் சக்தி முன்னெடுத்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

வங்கி மற்றும் நிதித்துறைசார் தொழிற்சங்கங்களுடன் கொழும்பில் நடைபெற்ற சந்திப்பில் கலந்துகொண்ட போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான நான்கு படிமுறைகள் நிறைவு பெற்றுள்ளதாகவும், வாக்கெடுப்பு மாத்திரமே மீதமுள்ள நிலையில், அதனை தடுக்க முடியாது என்றார்.

தேர்தல் தொடர்பில் எதிர்வரும் 10 ஆம் திகதி வழக்கு விசாரணை நடைபெறவுள்ள நிலையில், மக்களின் அடிப்படை உரிமைகளை பாதுகாப்பதை கடப்பாடாகக் கொண்டுள்ள நீதிமன்றம் தேர்தலை நடத்த வேண்டாம் என தீர்ப்பளிக்காது எனவும் அனுரகுமார திசாநாயக்க நம்பிக்கை வெளியிட்டார்.

## காதலியின் கட்டிலுக்கு அடியில் காதலன்

தனது வீட்டில் மகளின் கட்டிலுக்கு அடியில் மறைந்திருந்த 15 வயதான சிறுமியின் காதலன் என்று சந்தேகிக்கப்படும் இளைஞனை, அச்சிறுமியின் பெற்றோர் கையும் களவுமாக பிடித்து பொலிஸில் ஒப்படைத்துள்ளனர்.

மின்சாரம் துண்டிக்கப்படும் நேரத்தில் அவ்விளைஞன் தன்னுடைய காதலியுடன் உல்லாசமாக இருந்துள்ளார் என்றும் கண்டறியப்பட்டுள்ளது. இந்த சம்பவம் அனுராதபுரம் கல்கிரியாகம பிரதேசத்திலேயே இடம்பெற்றுள்ளது.

15 வயது சிறுமி தனது தாயின் அலைபேசியில் இளைஞருடன் காதல் உறவில் ஈடுபட்டு வந்துள்ளார். மகளின் நடவடிக்கையில் மாற்றத்தை கண்ட அம்மா, காதல் உறவை நிறுத்துமாறு எச்சரித்துள்ளார்.

இந்நிலையில், சந்தேக நபர் சிறுமியின் வீட்டுக்குள் இரகசியமாக சனிக்கிழமை (28) நுழைந்து மின்சாரம் துண்டிக்கப்படும் வரை சிறுமியின் கட்டிலுக்கு அடியில் பல மணிநேரம் தங்கியிருந்துள்ளார்.

இரவு 9 மணியளவில் மின்சாரம் துண்டிக்கப்பட்டதால் அவர் தனது காதலியுடன் படுக்கையில் இருந்தார்.

அதன் பின்னர் மீண்டும் 10 மணியளவில் மின்சாரம் வந்ததையடுத்து மீண்டும் படுக்கைக்கு அடியில் சென்றதாக பொலிஸாரிடம் காதலன் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், சிறுமியின் தந்தை அதிகாலை 3 மணியளவில் எழுந்து, தண்ணீர் குடிக்க வந்துள்ளார். அப்போது சிறுமியின் படுக்கையறையில் சத்தம் கேட்டுள்ளது.

கதவை திறந்துகொண்டு உள்ளே சென்றபோது, காதலன் இருந்துள்ளார். அதனையடுத்து, அவ்விளைஞனை பிடித்த சிறுமியின் தந்தை, இதுதொடர்பில் அவ்விளைஞனின் பெற்றோருக்கு தகவல் கொடுத்துள்ளார். அதேவேளை, பொலிஸாரிடமும் முறைப்பாடு செய்துள்ளார்.

அவ்விரு தரப்பினரும் வீட்டுக்கு வந்ததை அடுத்து, அவ்விளைஞனை அந்த சிறுமியின் தந்தை ஒப்படைத்துள்ளார்.

## "உள்ளூராட்சி ரேர்தலுக்காக நிதியை ஒதுக்கவும்"

## திகா எம்.பி வேண்டுகோள்

ரஞ்சித் ராஜபக்ஷ

தேசிய சுதந்திர தினத்தை கொண்டாடுவது போன்று உள்ளூராட்சி தேர்தலை நடத்துவதற்கு தேர்தல் ஆணையத்திற்கு நிதி ஒதுக்க வேண்டும் என தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் பழனி திகாம்பரம், தேர்தலை நடாத்துவதற்கு நிதி ஒதுக்குமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பிரசாரத்தை ஹட்டனில் நேற்று (29) ஆரம்பித்து வைத்த பின்னர் ஹட்டனில் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

## 200 ஆண்டுகள் நிறைவு







இந்திய வம்சாவளி மலையக தமிழ் மக்கள் இந்தியாவிலிருந்து வருகை தந்து இவ்வருடத்துடன் 200 ஆண்டுகள் நிறைவு பெறுகின்றன. இதனை நினைவு கூர்ந்து மக்களின் வாழ்வியலையும் கலை, கலாசார அம்சங்களை பிரதிபலிக்கும் வகையில் 1000 மேற்பட்டோர் கலந்து கொண்ட பாரிய ஊர்வலம் நேற்று (29) நடைபெற்றது. குறித்த ஊர்வலம் ஹட்டன்– மல்லியப்பு சந்தியில் ஆரம்பித்து ஹட்டன் டி.கே.டப்ளியு, கலாசார மண்டபத்தினை சென்றடைந்தது.

(எஸ்.கணேசன்)

## இந்தியா உதவாவிட்டிருந்தால் விளைவுகள் ஏற்பட்டிருக்கும்

இந்தியா துரிதமாக செயற்பட்டிருக்காவிட்டால், இலங்கையின் பொருளாதார நெருக்கடி மோசமான சமூக விளைவுகளை ஏற்படுத்தியிருக்கும் என இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட தெரிவித்துள்ளார்.

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு முயற்சிகளுக்கு ஆதரவளித்து, அதற்கான உறுதிப்பாட்டை சர்வதேச நாணய நிதியத்திற்கு வழங்கியமைக்காக இந்தியாவுக்கு அவர் நன்றி தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் ஆதரவு இரு நாடுகளுக்கும் இடையிலான நம்பிக்கையை மேலும் வலுப்படுத்துமெனவும் மிலிந்த மொரகொட நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இந்திய ஊடகமொன்றுக்கு அவர் வழங்கி செவ்வியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்தியா உதவியதை போன்று வேறெந்த நாட்டினாலும் இலங்கைக்கு உதவியிருக்க முடியாது எனவும் இந்தியாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகர் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் கடந்த ஒரு வருடத்திற்குள் மூன்று தடவைகள் இலங்கைக்கு விஜயம் செய்தமை இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவதாகவும், புதிய அத்தியாயத்திற்கு வழிவகுப்பதாகவும் மிலிந்த மொரகொட தெரிவித்துள்ளார்.

இது இலங்கையின் பொருளாதார மீளெழுச்சியின் ஆரம்பம் என மிலிந்த மொரகொட கூறியுள்ளார்.

# எழுதாரகையை ஆரம்பிக்கவும்

2017ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் வீதி அபிவிருத்தி அதிகார சபையால் வழங்கப்பட்ட எழுதாரகை பயணிகள் படகுச்சேவை 2019ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் எரிபொருள் பற்றாக்குறை காரணமாக இடைநிறுத்தப்பட்டது.

இதனால் ஊர்காவற்றுறை, காரைநகர், எழுவை தீவு, அனலைதீவு, நயினாதீவு வரையான சேவை இடம்பெறுவதில்லை. இதனால் இப்பயணிகள் படகுச்சேவையை பயன்படுத்தும் பயணிகள் கடும் சிரமத்துக்கு உள்ளாகியுள்ளனர்.

இது சம்மந்தமாக வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் திட்டப்பணிப்பாளர் குரூஸிடம் காரைநகர் பிரதேச சபையின் தவிசாளர் கணேசபிள்ளை பாலச்சந்திரன் பிரஸ்தாபித்துள்ளர்.

இது சம்மந்தமாக தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு பயணிகள்



கப்பல் சேவையை மீண்டும் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக திட்டப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இச்சேவை எதிர்காலத்தில் காரைநகர் இறங்குதுறையிலிருந்து ஆரம்பிக்கப்படவேண்டும் எனவும் தவிசாளரால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

1990 ஆம் ஆண்டுக்கு முன்பு காரைநகர் துறைமுகத்திலிருந்து மேற்படி சேவைகள் கிரமமாக இடம்பெற்றுள்ளன.

அத்துடன், எதிர்வரும் கச்சதீவு அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவத்துக்கும் காரைநகரிலிருந்து பயணிகள் கப்பல் சேவையை ஆரம்பிக்கவேண்டுமென தவிசாளர் பணிப்பாளரிடம் வலியுறுத்தியுள்ளார்.

தற்போது இப்பயணிகள் கப்பல் எழுவதீவு இறங்கு துறையில் தரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வசந்தவுக்காக யாழில் கையெழுத்து

■ நிதர்ஷன் வினோத்

வசந்த முதலிகேவின் விடுதலையை வலியுறுத்தி முன்னெடுக்கப்பட்டுவரும் கையெழுத்து போராட்டம் நேற்று (29) யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் பேரூந்து நிலையத்தில் இந்த கையெழுத்து போராட்டம் நேற்றுக்காலை 10.30 மணியளவில்



முன்னெடுக்கப்பட்டது.

குறித்த போராட்டத்தில் யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மீற்றர் வட்டிக்கு பணம் கொடுதவர்கள் தாக்கியுள்ளனர்

யாழ்ப்பாணத்தில் மீற்றர் வட்டிக்கு பணம் கொடுக்கும் நபர்கள், கடத்தல் மற்றும் சித்திரவதைகளில் ஈடுபடும் அதிர்ச்சி காணொளிகள் வெளியாகியுள்ளன.

இவ்வாறான சம்பவங்கள் சுன்னாகம், மயிலங்காடு பகுதியில் நடப்பது தெரிய வந்துள்ளது.

மீற்றர் வட்டிக்கு பணம் கொடுப்பவர்கள், பணத்தை குறிப்பிட்ட திகதியில் தராவிட்டால், பணம் வாங்கியவரை கடத்திச் சென்று, சித்திரவதை செய்யும் அதிர்ச்சி சம்பவங்களும் வெளியாகியுள்ளன.

சமூக வலைத்தளங்களில் பரவிய இரண்டு காணொளிகளில், ஒரே குழுவினால் இரண்டு வெவ்வேறு நபர்கள் அடித்து சித்திரவதைப்படுத்தப்படுவது பதிவாகியிருந்தது.

அவர்கள் மீற்றர் வட்டிக்கு பணம் வாங்கியிருப்பதும், குறிப்பிட்ட நாளில் பணத்தை திருப்பி கொடுக்காததால், கடத்திச் செல்லப்பட்டு, தாக்கப்படுவதும் காணொளி உரையாடலில் இருந்து தெரிய வருகிறது.

சுன்னாகம் மற்றும் மயிலங்காடு பகுதியை சேர்ந்த கும்பலே இந்த அடாவடியில் ஈடுபட்டுள்ளது. காணொளியில் பதிவாகியுள்ள இரண்டு தாக்குதலாளிகளும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

## "கல்விக்கு கை கொடுப்போம்"

■ நிதர்ஷன் வினோத்

"கல்விக்கு கை கொடுப்போம்" எனும் தொனிப்பொருளில் தென்மராட்சி நிறுவனங்களின் சர்வதேச ஒன்றியத்தின் ஏற்பாட்டில் பல்கலைக்கழக மாணவர்கள், சேவையாளர் கௌரவிப்பும் உயர்தர மாணவர்களுக்கு உதவு தொகை வழங்கும் நிகழ்வும் யாழ். தென்மராட்சி அறவழி போராட்ட குழுவின் அலுவலகத்தில் சனிக்கிழமை (28) இடம்பெற்றது.

தென்மராட்சி நிறுவனங்களின் சர்வதேச ஒன்றியத்தின் அதிபர். செ.பேரின்பநாதன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் சமூக அபிவிருத்தி மேம்பாட்டாளருக்கான விருது க. நடராஜா, வாழ்நாள் சமூக வேவையாளருக்கான விருது வி.எஸ்.துரைராசா, பல்கலை வித்தகர் கலைஞருக்கான விருது வி.திவ்வியராஜனுக்கும் வழங்கி வைக்கப்பட்டது.

பல்கலைக்கழக புகு



மாணவர்கள் 20 பேருக்கு விருதும் தலா 5 ஆயிரம் ரூபாய் பணமும், க.பொ.த உயர்தர 50 மாணவர்களுக்கு தலா 3 ஆயிரம் ரூபாய் பணமும் வழங்கி வைப்பு.

இந்த நிகழ்வில் தென்மராட்சி வலய பிரதி கல்விப் பணிப்பாளர் செல்வி இராஜதுரை அபிராமி பிரதம விருந்தினராகவும், தென்மராட்சி நிறுவனங்களின் சர்வதேச ஒன்றியத்தின் நிறுவுநர் இணைப்பாளர் இரா. சத்தியசீலன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.

நிறுவன பிரதிநிதிகள், கல்வியாளர்கள் , மாணவர்கள் உட்பட பலரும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## வட்ஸ்அப் ஊடாக அச்சுறுத்தல்

■ நிதர்ஷன் வினோத்

தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினருக்கு சமுக வலைத்தளம் ஊடாக கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலுக்கான மக்கள் அமைப்புக்கு (கபே) முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களில் ஒருவரான எம்.எம்.மொஹமட்டுக்கு சமுக வலைத்தளமான வட்ஸ்அப் ஊடாக கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டமை தொடர்பாவே கபே அமைப்புக்கு முறைப்பாடு




செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பொது நூலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலுக்கான மக்கள் அமைப்பின் பணிப்பாளர் மனாஸ் மக்கீன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

## சுதந்திர தினத்தன்று பேரணி

சுதந்திர தினமான பெப்ரவரி நான்காம் திகதியை கரிநாளாக பிரகடனபடுத்தி தமிழர்களுக்கான தீர்வுகளை வலியுறுத்தி யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் இருந்து மட்டக்களப்பு நோக்கி பேரணி ஒன்று இடம்பெறவுள்ளது.

இது தொடர்பில், யாழ். மாவட்டத்தில் சிவில் அமைப்புக்களிடையே கலந்துரையாடல் ஒன்று அண்மையில் இடம்பெற்றது.

இதனை தொடர்ந்து மன்னார் மற்றும் வவுனியா மாவட்டத்தில் உள்ள மதகுருமார், சிவில் அமைப்புக்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் என பலதரப்பினரையும் வெள்ளிக்கிழமை (27) சந்தித்து யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் கலந்துரையாடியுள்ளனர்.

அவர்கள் தமது போராட்டத்துக்கான ஒத்துழைப்பைகோரிய நிலையில் வவுனியா மாவட்ட சிவில் அமைப்புக்கள் மதகுருமார், பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது ஆதரவை தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் மாணவர் ஒன்றியத்தினரால் போராட்டம் தொடர்பான ஆதரவு கோரிய கலந்துரையாடல்கள் தொடர்ச்சியாக இடம்பெறவுள்ளன என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிராக வந்திருப்பது

# எங்களுக்குப் பலம்

■ எச்.எம்.எம்.பர்ஸான்

வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் ஒரு வருடத்துக்குள் மாத்திரம் போதைப்பொருளுக்கு எதிராக அதிகளவிலான முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எஸ்.எம்.எல். ஆர்.பண்டார தெரிவித்தார்.

போதைப்பொருள் விற்பனை மற்றும் பாவனைகளுக்கு எதிராக செம்மண்ணோடை பள்ளிவாசல்கள் மற்றும் சமூக நிறுவனங்களின் சம்மேளனம் வெள்ளிக்கிழமை (27) மாபெரும் விழிப்புணர் பேரணி ஒன்றை ஏற்பாடு செய்திருந்தனர்.

அதில் கலந்துகொண்டு பேசும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

போதைப்பொருள் விற்பனைகளில் ஈடுபடும் நபர்களுக்கு நாங்கள்



எந்தவித கருணைகளும் காட்டமாட்டோம். அவர்களை கைது செய்து சட்டத்தின் முன்னிறுத்த அத்தனை விடயங்களையும் மேற்கொள்வோம்.

வாழைச்சேனை - நாவலடி பகுதியில் எட்டுமாத குழந்தையின் தாய் ஒருவரை போதைப்பொருள்களுடன் கைது செய்துள்ளோம். அந்த பெண்ணை விடுவிக்கக் கோரி பல்வேறுபட்ட நபர்கள் எங்களுக்கு அழுத்தங்களை தந்தார்கள். ஆனால், நாங்கள் அவர் மீது எந்தவித அனுதாபங்களும் காட்டாமல் குழந்தையுடன் சிறையில் வைத்துள்ளோம்.

ஆரம்பத்தில் எங்களால் மட்டும்தான் இந்த பணிகளை செய்யவேண்டிய நிலை இருந்தது. ஆனால் இப்போது நீங்கள் எல்லாம் சமூகத்தோடு சேர்ந்து இதற்கு எதிராக வந்திருப்பது எங்களுக்கு பெரியதொரு பலத்தை தந்திருக்கிறது.

இந்த போதைப்பொருள் பாவனையில் இருந்து உங்களது சமூகத்தை பாதுகாக்க நீங்கள் எடுத்துக் கொண்டுள்ள முயற்சிக்கு நான் மிகவும் தலைவணங்குகிறேன். பள்ளிவாசல்கள், சமய நிறுவனங்கள் எங்களுக்கு பூரண ஒத்துழைப்புகளை வழங்கி வருகின்றன என்றார்.

## விழிப்பூட்டும் கலந்துரையாடல்



■ க.விஜயரெத்தினம்

அம்பாறை மாவட்டத்தில் உள்ள ஊடகவியலாளர்களுக்கான சமாதானம்,நல்லிணக்கம் தொடர்பான விழிப்பூட்டும் கலந்துரையாடல் நிகழ்வு சமாதானமும்,சமூகப்பணியும் நிறுவனத்தின் ஏற்பாட்டில் கல்முனை எஸ்.எல்.ஆர் தனியார் விடுதியில் ஞாயிற்றுக்கிழமை (29)காலை முதல் மாலை வரையும் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடல் நிகழ்வில் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் தமிழ்துறை மற்றும்,ஊடகத்துறைக்கான பொறுப்பான முதனிலை பேராசிரியர் ரமீஸ் அப்துல்லா ,சமாதானமும்,சமூகப்பணியும் நிறுவனத்தின் தேசிய பணிப்பாளர் ரீ.தயாபரன்,முகாமையாளர் ரீ.இராஜேந்திரன்,இணைப்பாளர் எஸ்.எல்.அப்துல் அஸீஸ் மற்றும் ஊடகவியலாளர்கள்,இளைஞர்கள்,சமூக ஆர்வலர்கள்,பெண்கள் கலந்துகொண்டார்கள்.

இதன்போது ஊடக தர்மமும் ஊடக ஒழுக்கமும்,ஊடகத்துறையின் நல்லிணக்கமும் மீள் ஒழுக்கமும் எனும் தலைப்பில் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் தமிழ்துறை மற்றும் ஊடகத்துறையின் முதனிலை பேராசிரியர் ரமீஸ் அப்துல்லா விரிவுரையினை நிகழ்த்தினார்.

## பீடாதிபதியாக மீண்டும் தெரிவு

■ எம்.எஸ்.எம்.ஹனீபா



தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்பவியல் பீடத்தின் பீடாதிபதியாக இரண்டாவது தடவையாகவும் கலாநிதி யூ.எல். அப்துல் மஜீட் மீண்டும் போட்டியின்றி வெள்ளிக்கிழமை (27) தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் பட்டதாரியாக வெளியேறிய இவர் நுவான் கடலுணவு தனியார் நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரியாகவும் விஞ்ஞான, தொழில்நுட்ப அமைச்சில் விஞ்ஞான தொழில்நுட்ப அதிகாரியாகவும் இலங்கை தரநிர்ணய நிறுவனத்தின் உதவிப் பணிப்பாளர் (தொழில்நுட்பம்) ஆகவும் இலங்கை வாழ்க்கைத் தொழில் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளராகவும் பணியாற்றி வந்த இவர் கடந்த 2016ம் ஆண்டு தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட விரிவுரையாளராக கடமையேற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பொங்கல் விழா



■ ஹஸ்பர்

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரனையிலும் மாவட்ட செயலகத்தின் ஒழுங்கமைப்பில் மாவட்ட பொங்கல் விழா சம்பூர் அருள்மிகு பத்ரகாளி அம்பாள் ஆலயத்தில் திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் பி. எச். என். ஜயவிக்ரம தலைமையில் சனிக்கிழமை (28) நடைபெற்றது.

பாரம்பரிய அம்சங்களை வெளிக்கொணரும் வகையில் இப்பொங்கல் விழா நிகழ்வுகள் மிக சிறப்பான முறையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

அரசாங்க அதிபர் தலைமையிலான அதிகாரிகள் மாட்டு வண்டியில் வயலுக்கு சென்று அருவி வெட்டியதுடன், உழவுத் தொழிலின் உன்னத தன்மையை இச்சம்பவம் பறைசாற்றுவதாக அமைய பெற்றிருந்தது.

பொங்கல் விழா நிகழ்ச்சிகளில் பங்கு பற்றிய அறநெறிபாடசாலை மாணவர்களுக்கு இதன்போது மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையிலான அதிகாரிகள் பரிசில்களை வழங்கி வைத்தனர்.

## இரு மாணவர்கள் சாதனை



■ எப்.முபாரக்

தி/கறுமலையூற்று முஸ்லிம் வித்தியாலயத்தில் 2022 புலமைப் பரிசில் பரீட்சையில் அனஸ் அம்னத் ஹானியா 150 புள்ளிகளையும், நூஸ்ரத் ஹம்தான் அகமட் 142 புள்ளிகளையும் பெற்று சாதனை படைத்துள்ளனர்.

இது பாடசாலை வரலாற்றில் முதன்முறையாக இரு மாணவர்கள் சித்தியடைந்து பாடசாலைக்கு பெறுமை சேர்த்துள்ளதாக பாடசாலை அதிபர் கே.எம். எம்.நவாஸ் தெரிவித்துள்ளார்.

## மரக்கன்றுகள் நடும் நிகழ்வு

■ நூருல் ஹூதா உமர

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம் றிபாஸின் ஆலோசனைக்கும் வழிகாட்டலுக்கும் அமைவாக தாய் சேய் நலப்பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் ஏ.எச்.ரிஸ்பின் தாய் சிசு போசாக்கு திட்டத்தின் கீழ் தாய்மார்களின் குருதிச் சோகை நோயை குறைப்பதற்காகவும் முகாமைத்துவம் செய்வதற்காகவும் திருக்கோவில் தங்க வேலாயுதபுரம் கிராமத்தில் சுமார் 5 ஏக்கர் நிலப்பரப்பில் போசனை மிகுந்த பயிர் இனங்களை நடும் நிகழ்வு சனிக்கிழமை (28) இடம்பெற்றது.

கல்முனை சுகாதார பிராந்தியத்தில் தாய்மார்களின் குருதிச் சோகையின் அளவு 28 வீதமாக காணப்படுகின்றது அதேபோன்று பொத்துவில்



மற்றும் இறக்காமல் பிரதேசங்களில் 40% காணப்படுகின்றது இதனை குறைத்து தாய்மார்களின் போசாக்கு மட்டத்தை அதிகரிப்பதற்கான திட்டங்களின் கீழ் ஒரு பகுதியாக போசனைக் கன்றுகளை நடும் இத்திட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது.

குறித்த நிகழ்வில் திருக்கோவில் சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் பிரதேச வைத்திய வைத்திய அதிகாரி பொது சுகாதார உத்தியோகத்தர்கள் பொது சுகாதார மாதுக்கள் மற்றும் ஏனைய கள உத்தியோகத்தர்களும் பங்கு பற்றினார்கள்.

# பெயார்லோன் த.வியில் 18 மாணவர்கள் சித்தி

■ செ.தி.பெருமாள்

மமா/ஹவ/பெயார்லோன் தமிழ் வித்தியாலயத்தில் 2022 ம் ஆண்டு தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சையில் 18 மாணவர்கள் சித்தி பெற்று சாதனை படைத்துள்ளனர்.

இதற்கமைய, A. துவிக்ஷா 162, N. பிரேம்குமார் 162, K. தீபன் 162, S. சமிக்ஷா 160, P. பிரவீனா 160, M. யுனேஸ்குமார் 160, N. சவிஸ்ன மோனிக்கா 155, K. சஹித் 152, S. டிலுக்ஷி 151, S. பவித்திரன் 150, R. நதீஷா 150, K. சுபாஷினி 147, S.டியோபிசாத் 147, S. யசாந்தினி 147, M. ரித்திக்ஸ் 145, A. சந்தோஷ் 144, V.திவ்ய தன்ய ஸ்ரீ 144, R. தேவகி 143 ஆகியோர் சித்தியடைந்துள்ளனர்.

இப்பரீட்சையில் 70 புள்ளிகளுக்கு மேல் 92% மாணவர்கள் பெற்றிருப்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இம்மாணவர்களுக்கு அர்ப்பணிப்புடன் கற்பித்த ஆசிரியர்களான A. எந்தனிபோல், செல்வி. B. மோகனப்பிரியா ஆகியோருக்கும் ஒத்துழைப்பு நல்கிய ஏனைய ஆசிரியர்களுக்கும் பெற்றோர்களுக்கும் தமது மனமார்ந்த வாழ்த்துக்களையும் நன்றிகளையும் அதிபர் S. பிரபாகரன் தெரிவிக்கின்றார்.

# பழைய விலைகளை மறைத்தவர் கைது

■ சுமணசிறி குணதிலக்க

பிபில நகரில் பாதணி விற்பனை செய்யும் கடையொன்றில் பழைய விலைகளை மறைத்து அதிக விலையை குறிப்பிட்டு, ஸ்டிக்கர் ஒட்டி பாதணிகளை விற்பனை செய்த கடை உரிமையாளர் ஒருவர் நுகர்வோர் அதிகாரசபையின் மொனராகலை மாவட்ட அலுவலக அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

குறித்த சந்தேகநபர் கடந்த 27ஆம் திகதி கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதன்போது இவ்வாறு விலை மறைக்கப்பட்ட சுமார் 80 ஆயிரம் ரூபாய் பெறுமதியான சுமார் முப்பது ஜோடி பாதணிகளை நுகர்வோர் அதிகாரசபை அதிகாரிகள் கண்டுபிடித்துள்ளனர்.

கடை உரிமையாளருக்கு எதிராக பிபில நீதவான் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

ரதெல்ல குறுக்கு வீதியில் பயணிப்பதற்கு

# நாளாந்தம் பயணிக்கும் பஸ்களை அனுமதிக்கவும்

## பிரதேசவாசிகள் கோரிக்கை

■ ரஞ்சித் ராஜபக்ஷ

நானுஓயா- ரதெல்ல குறுக்கு வீதியூடாக தினமும் சேவையில் ஈடுபட்ட தனியார் மற்றும் இலங்கை போக்குவரத்து சமைக்குச் சொந்தமான பஸ்களுக்கு மாத்திரமாவது, தற்போது அவ்வீதியூடாக பயணிக்க அனுமதி வழங்க வேண்டுமென பிரதேசவாசிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

குறித்த வீதியில் கடந்த 20ஆம் திகதி இடம்பெற்ற விபத்தையடுத்து குறித்த வீதியுடனான கனரக போக்குவரத்துக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த குறுக்கு வீதியூடாக நாளொன்றுக்கு 40 தனியார் மற்றும் இ.போ.ச பஸ்கள் சேவையில் ஈடுபட்டு வருவதுடன், குறித்த பஸ்கள் அனைத்தும் ஹட்டனிலிருந்து நுவரெலியா வரையும் நுவரெலியாவிலிருந்து ஹட்டன் வரையும் சேவையில் ஈடுபட்டு வருவதாக பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

இதற்கு மேலதிகமாக குறித்த குறுக்கு வீதியூடாக கதிர்காமம், மட்டகளப்பு உள்ளிட்ட பல பிரதேசங்களுக்கான நீண்ட தூர பஸ்களும் சேவையில் ஈடுபட்டதுடன், தற்போதைய போக்குவரத்து தடை காரணமாக குறித்த சகல பஸ்களும் ரதெல்ல- கிரிமெட்டிய சுற்றுவட்டம் ஊடாக பயணிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது .

குறித்த சுற்றவட்டப் பாதையில் பஸ்கள் சேவையில் ஈடுபடும் போது 7 கிலோமீற்றர் தூரம் அதிகமாக பயணிக்க வேண்டி இருப்பதுடன் குறித்த வீதியில் அதிக வளைவுகளும் காணப்படுவதாக தெரிவிக்கின்றனர்.

மேலும் அந்த வீதியுடனான போக்குவரத்துக்கு அதிக செலவு ஏற்படுவதாகவும் தற்போது ரதெல்ல குறுக்கு வீதி மூடப்பட்டுள்ளதால் தமக்கு அதிகம் நட்டம் ஏற்படுவதாகவும் பஸ் உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே, இவற்றை கவனத்தில் கொண்டு குறித்த ரதெல்ல குறுக்கு வீதியில் அன்றாட சேவையில் ஈடுபடும் பஸ்களுக்கு மாத்திரம் போக்குவரத்து அனுமதியை வழங்குமாறும் பிரதேசவாசிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.





# இரண்டு நாட்களில் 34 பேர் கைது

■ சுதத்.எச்.எம்.ஹேவா

பல்வேறு போதைப் பொருட்களுடன் சிவனொளிபாதமலைக்கு வருகைத் தந்த 34 இளைஞர்கள் ஹட்டன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொலிஸ் நிலையங்களைச் சேர்ந்த பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் ஹட்டன் பொலிஸ் பிரிவு குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரி ஒருவர் தெரிவிக்கையில், கடந்த 27, 28ஆம் திகதிகளில் பல்வேறு போதைப் பொருட்களுடன் வருகைத் தந்த 34 இளைஞர்களே கைது செய்யப்பட்டுள்ளனர் என்றார்.

சிவனொளிபாதமலை யாத்திரிகர்கள் வருகைத் தரும் வாகனங்கள் வீதிச் சோதனை சாவடிகளில் நிறுத்தப்பட்டு சோதனையிடப்பட்ட போதே, இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்றும் தெரிவித்தார்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்கள் 20 முதல் 30 வயதுக்கு இடைப்பட்டவர்கள் எனவும் சந்தேகநபர்களை ஹட்டன் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சிகரெட் புகையைால்

# சுற்றுலாப் பயணிகள் இருவர் மீது தாக்குதல்

■ சுமணசிறி குணதிலக

வெல்லவாய ரக்பிதாதகந்த புராதன ரஜமஹா விஹாரையை பார்வையிட வந்த பிரான்ஸ் நாட்டு பெண் உட்பட மூவர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் நேற்று முன்தினம்(28) முறைப்பாடு கிடைத்துள்ளதாக வெல்லவாய பொலிஸார் தெரிவித்தனர்.

பிரான்ஸைச் சேர்ந்த பெண்ணொருவர் கடந்த 21ஆம் திகதி, தனது கணவர் மற்றும் குழந்தையுடன் இலங்கைக்கு சுற்றுலா வந்துள்ளதுடன், மிரிஸ்ஸ பகுதியிலுள்ள குறித்த விஹாரைக்குச் சென்று மீண்டும் வாகன தரிப்பிடத்திற்கு 27ஆம் திகதி வந்துள்ளனர்.

அப்போது வாகன நிறுத்துமிடத்தில் இருந்த சுற்றுலா வழிகாட்டி மற்றும் சாரதியுடன் சிகரெட் புகைத்துக் கொண்டிருந்ததாகவும் இதன்போது, அந்த இடத்தக்கு வருகைத் தந்த குறித்த விஹாரையின் பிக்கு ஒருவர், இங்கு புகை பிடிக்க வேண்டாம் என கூறியுள்ளார்.

இதன்போது அப்பெண், குறித்த பிக்குவின் முகத்தில் சிகரெட் புகையை ஊதியதாகவும் இதனையடுத்து அப்பெண்ணையும் அவர்களின் வாகன சாரதியையும் பிக்கு தாக்கியுள்ளார்.

அத்துடன் அப்பெண்ணின் கணவரும் பிக்குவால் தாக்கப்பட்டுள்ளதாகவும் இச்சம்பவம் தொடர்பில் குறித்த பெண், வெல்லவாய பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் வெல்லவாய பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# ரோட்டரி கழகங்களுடன் உடன்படிக்கை



இந்தியாவின் கோயம்புத்தூர் மேற்கு ரோட்டரி கழகமும் இலங்கை டிக்கோயா ரோட்டரி கழகமும் நட்பு கழகங்களாக செயற்படுவதற்கான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. (எஸ்.கே. குமார்)

# 21 வருடங்களின் பின் கிடைத்த வெற்றி

■ நடராஜா மலர்வேந்தன்

வெளியாகியுள்ள 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில், பசறை -கல்போர்க் தமிழ் வித்தியாலயத்தின் மாணவி புவனேஸ்வரன் பவிமலர் (143 ) புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார்.

21 வருடங்களுக்குப் பிறகு, இப்பாடசாலையில் இருந்து புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியெய்தியமை பதிவாகியுள்ளது.

பாடசாலைக்கு பெருமை சேர்த்த மாணவியையும் கற்பித்து வழிப்படுத்திய ஏ.அருள்பிரகாசம் ஆசிரியரையும் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர் வாழ்த்தியுள்ளனர்.



# புளும்பீல்ட் த.வியில் ஆறு மாணவர்கள் சித்தி

■ செ.தி . பெருமாள்

மமா/ஹவ/புளூம்பீல்ட் தமிழ் மகாவித்தியாலயத்தில் 2022 ம் ஆண்டு தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சையில் 06 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

இதற்கமைய, U. லிதுஷன் 162, S .மாதேசிங் 160, S .கவிதர்ஷிகா 157, T. சாருக்ஷி 154, J. சிவகரன் 143, S. சந்தோஷ் 142 ஆகியோர் சித்தியடைந்துள்ளதுடன், இப்பரீட்சையில் 70 புள்ளிகளுக்கு மேல் 80% மாணவர்கள் பெற்றுள்ளனர்.

பொது சுகாதார பரிசோதகர்கள்

# இராகலையில் சோதனை

■ ஆ.ரமேஸ்

இராகலை பொது சுகாதார பரிசோதக அதிகாரிகளால் இரா கலை,உடப்புஸலாவ,எமஸ்ட், மெதவத்த, ஆகிய நகரங்களில் விசேட சோதனை நடவடிக்கைகள் நேற்றுமுன்தினம் (28) முன்னெடுக்கப்பட்டன.

குறித்த நகரங்களில் உள்ள உணவக ங்கள்,சிற்றுண்டிச்சாலைகள், கோழி மற்றும் மீன் இறைச்சி விற்பனை நிலையங்கள் ,அங்காடி விற்பனை நிலையங்கள் என்பன சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இதன்போது பாவனைக்குதவாத உணவு பொருட்கள் கைப்பற்றப்பட்டதுடன், அவற்றை விற்பனை செய்த வர்த்தகர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது.



அத்துடன் காலாவதியான பொருட்களை அழிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அம்பகமுவ பிரதேச சபையின் அதிகாரத்தை

# சுதந்திர கூட்டமைப்பு கைப்பற்றும்



■ சுதத்.எச்.எம்.ஹேவா

நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் அம்பகமுவ பிரதேச சபையின் ஆட்சி அதிகாரத்தை சுதந்திர மக்கள் கூட்டமைப்பு கைப்பற்றும் எனவும், இந்த அரசாங்கத்தை மாற்றுவதற்கான முதல் படியே இந்தத் தேர்தல் எனவும் அக்கூட்டமைப்பின் நுவரெலியா மாவட்ட தேர்தல் குழு உறுப்பினரும் வேட்பாளருமான டபிள்யு.ஜீ ரணசிங்க தெரிவித்துள்ளார்.

சுதந்திர மக்கள் முன்னணியின் வேட்பாளர்கள் மற்றும் தேர்தல் குழு பிரதிநிதிகளுடன் கினிகத்ஹேனயில் நடைபெற்ற சந்திப்பின் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

இவ்வருட உள்ளூராட்சி சபைத் தேர்தலில் சுதந்திர மக்கள் கூட்டமைப்பு அம்பகமுவ பிரதேச சபைக்கு மிகவும் பலம் வாய்ந்த வேட்பாளர்களை நிறுத்தியுள்ளது.

இந்த குழுவினர் பிரதேசத்தில் வீடு வீடாகச் சென்று நாட்டின் தற்போதைய நிலைமைகளை மக்களுக்கு எடுத்துரைத்து அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும், உள்ளூராட்சி தேர்தலே ஆட்சியை மாற்றுவதற்கான முதல் படி என்றும், நிலைமையை மக்களுக்கு தெரிவித்து ஆட்சியை மாற்ற காத்திருக்கும் மக்களின் ஆதரவை பெற தனது அணி நடவடிக்கை எடுக்கும் என்றும் அவர் கூறினார்.

கருப்பையாவின் சடலம்

# ஆற்றிலிருந்து மீட்பு

■ ரஞ்சித் ராஜபக்ஷ

சிகிச்சைக்காக பொகவந்தலாவை பிரதேச வைத்தியசாலைக்குச் சென்ற 3 பிள்ளைகளின் தந்தையொருவர், காசல்றீ நீர்த்தேக்கத்திலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் பொகவானை தோட்டத்தைச் சேர்ந்த 75 வயதான பெரியண்ணன் கருப்பையா என அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொகவந்தலாவை பொலிஸார் தெரிவித்தனர்.

பொகவந்தலாவை வைத்தியசாலைக்கு நேற்று (29) காலை கிளினுக்குக்குச் செல்வதாக தெரிவித்து, கெசல்கமுவ ஆற்றின் ஊடாக செல்லும் குறுகிய பாதை ஊடாக பயணித்துள்ள நிலையில்,



ஆற்றில் விழுந்து உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக டிக்கோயா -கிளங்கன் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக பொகவந்தலாவை பொலிஸார் தெரிவித்தனர்.

# புஸ்ஸலாவ சரஸ்வதியில் 11 மாணவர்கள் சித்தி

■ எஸ்.கணேசன்

கம்பளை - புஸ்ஸலாவ சரஸ்வதி மத்திய கல்லூரியிலிருந்து 2022 - புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றிய 94 மாணவர்களுள் 11 பேர் வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்தியடைந்துள்ளனர். அத்துடன், 59 மாணவர்கள் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளனர்.

இதற்கமைய, ஆர். பிரஷாயுதன் – 161, ஏ. ஐதுர்ஷிக்கா - 160, எம். தாரிக்கா – 156, பி. மெலிஷா – 155, ஜே. விதுர்ஷன் – 154, யூ. கீதன் – 153, எஸ். ஹோம்ஷிகா – 149, எஸ். லிதுர்ஷன் – 149, ஜி. நேஹறன் – 147, எம். கியோசி – 147, ஆர். ஷாகித்யன் ஆகிய 11 மாணவர்களும் வெட்டுப்புள்ளிக்கு அதிகமான புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தள்ளனர்.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையை மாணவர்கள் வெற்றிகரமாக எதிர்கொள்வதற்கு எல்லா வழிகளிலும் பக்கம் பலமாக இருந்த கல்லூரியின் அதிபர் ஜி. லோகேஸ்வரனுக்கும், மாணவர்களை உரிய வகையில் தயார்படு த்தி, நெறிப்படுத்திய வகுப்பாசிரியர்களான எஸ். அரியரட்ணம், திருமதி ஏ. கனிமொழி ஆகியோருக்கும், பாடசாலையின் முன்னாள் அதிருபர் எஸ். ரவிச்சந்திரன் உட்பட அனைத்து ஆசிரியர்களுக்கும் பெற்றோர், பாடசாலையின் அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர்கள் சங்க உறுஎப்பினர்கள் உள்ளிட்டோர் நன்றிகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துள்ளனர்.

# இழுபறிக்கு மத்தியில் பாதிக்கப்படும் எதிர்கால சந்ததியினர்

2022 ஆம் ஆண்டுக்கான க.பொ.த. உயர்தரப் பரீட்சைகள் கடந்த ஒரு வார காலமாக நடைபெற்று வரும் நிலையில், இந்தப் பரீட்சை இடம்பெறும் காலப்பகுதியில் இரவு வேளை மின்வெட்டை தவிர்க்குமாறு இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ஆகியன இணைந்து இலங்கை மின்சார சபையிடம் கோரிக்கை முன்வைத்திருந்தன.

கடந்த வாரம் முழுவதும் பிரதான பேசு பொருட்களில் ஒன்றாக அமைந்திருந்த இந்த மின்வெட்டு அமுலாக்கப்படும், மின்வெட்டுக்கு அனுமதியில்லை போன்ற செய்திகளால் பரீட்சை எழுதும் மாணவர்கள் பரீட்சைக் காலத்தில் அதிகளவு குழப்பமடைந்திருந்ததை அவதானிக்க முடிந்தது.

இந்த விடயம் தொடர்பில் மின்சார சபைக்கும், இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்குமிடையே பனிப்போர் இடம்பெறுவதையும், ஒருவருக்கொருவர் சளைத்தவர்களில்லை எனும் பாணியில் அறிக்கைகளை வெளியிடுவதையும், எவ்வாறான அறிக்கைகள், அறிவித்தல்கள் வெளிவந்தாலும், மின்வெட்டு அமுல்ப்படுத்தப்படுவதில் எவ்விதமான மாற்றங்கள் இடம்பெறாததையும் பொது மக்களால் அனுபவிக்க முடிந்தது.

உயர்தரப் பரீட்சை இடம்பெறும் காலப்பகுதியில் மின்வெட்டு அமுலாக்கப்பட்டால் மின்சார சபைக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும், பரீட்சை இடம்பெறும் காலப்பகுதியில் மின்வெட்டை அமுலாக்குவதற்கு தாம் அனுமதி வழங்கவில்லை எனவும் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு வெளியிட்ட அறிவித்தலில் குறிப்பிடப்பட்டிருந்தது.

மாறாக, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுடனான சந்திப்பில் இலங்கை மின்சார சபை சார்பாக பங்கேற்றிருந்த அதிகாரிகளுக்கு அச்சுறுத்தி, வலுக்கட்டாயமாக சில ஆவணங்களில் கையொப்பம் பெறப்பட்டதாகவும், இதற்கு எதிராக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்வது தொடர்பில் தாம் ஆராய்வதாக மின்சக்தி அமைச்சர் கடந்த வார இறுதியில் வெளியிட்டிருந்த டுவிட்டர் பதிவில் குறிப்பிட்டிருந்தார்.

மின்சக்தி மற்றும் வலுச்சக்தி அமைச்சின் செயலாளருக்கும் இந்த சந்திப்பில் பங்கேற்க அழைப்புவிடுக்கப்பட்டிருந்த போதிலும், அவருக்குப் பதிலாக மேலதிக செயலாளர் ஒருவர் இந்த சந்திப்பில் பங்கேற்றிருந்தமையின் காரணமாக இந்த நெருக்கடி நிலை மேலும் மோசமடைந்துள்ளதாக இலங்கைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்திருந்தார்.

இவ்வாறு இருசாராருக்குமிடையே இழுபறி நிலவிய போதிலும், முன்னர் ஒரு அட்டவணை பிரகாரம் இடம்பெற்ற மின்வெட்டு, கடந்த சில தினங்களில் எவ்வித அட்டவணையுமின்றி, எழுந்தமானதாக அமுல்படுத்தப்பட்டதாக நாட்டின் பல பாகங்களிலிருந்து அறிந்து கொள்ள முடிந்தது.

இதே இழுபறி நிலை இந்த வாரமும் தொடர்வதற்கான சாத்தியக்கூறுகள் அதிகளவில் நிலவுகின்றன. எது எவ்வாறாயினும் இரு சாராரும் மின்வெட்டை அமுல்படுத்துவதா இல்லையா எனும் ஒரு இறுதித் தீர்மானத்துக்கு வருவதற்கிடையில், க.பொ.த உயர் தரப் பரீட்சைகள் நிறைவடைந்துவிடுவதற்கான சூழ்நிலை பெரிதும் காணப்படுகின்றது.

அதிகார போட்டி, பொறுப்பற்ற நடத்தை, பொறுப்புக்கூற வேண்டியவர்களின் அசமந்த போக்கு போன்றவற்றினால் பாதிக்கப்படுவது நாட்டின் எதிர்கால சந்ததியினரே.


தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk


# ரணிலும், 13ம் திருத்தமும், இனப்பிரச்சினைக்கான தீர்வும்



என்.கே.அஷோக்பரன்
Twitter: @nkashokbharan

இனப்பிரச்சினை தீர்வு தொடர்பிலான சர்வ-கட்சி மாநாட்டின் அடுத்தபடியாக, கடந்த வாரம், ஜனவரி 26ம் திகதி, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்ஹ தலைமையில் சர்வகட்சி மாநாடு கூடியது. இதில் பலவிடயங்களை தனது பேச்சில், பதிலளிப்புக்களிலும் ஜனாதிபதி குறிப்பிட்டிருந்தார். அவற்றிலிருந்து ஜனாதிபதி ரணிலின் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பான எண்ணம் பற்றிய மேலதிக தெளிவு புலப்படுகிறது.

குறித்த சர்வகட்சி மாநாட்டில், ஜனாதிபதி ரணில், பின்வரும் விடயங்களைக் குறிப்பிட்டிருந்தமை, இங்கு கவனிக்கத்தக்கது:

அரசியலமைப்பின் 13ம் திருத்தம் முழுமையாக அமுல்படுத்தப்படவேண்டும் அல்லது பாராளுமன்றம் 13ம் திருத்தத்தை இல்லாதொழிக்க வேண்டும். தற்போது நடைமுறையிலுள்ள அரசியலமைப்பை நடைமுறைப்படுத்துவது என்பது நிர்வாகத்துறைத் தலைவர் என்ற முறையில் எனது பொறுப்பு.

37 ஆண்டுகளாக, 13ம் திருத்தம் அரசியலமைப்பின் ஒரு பகுதியாக உள்ளது. தனிப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர், 13ம் திருத்தத்தை இல்லாதொழிக்க தனிப்பட்ட மசோதாவை பாராளுமன்றத்தில் அரசியலமைப்பின் 22 வது திருத்தமாக முன்வைக்கலாம். சபையில் பெரும்பான்மையினர் குறித்த மசோதாவுக்கு எதிராக வாக்களித்தால், 13ம் திருத்தத்தை நான் முழுமையாக அமல்படுத்த வேண்டும். ஒன்றில் அரசியலமைப்பை நான் முழுமையாக செயல்படுத்த வேண்டும் அல்லது பாராளுமன்றம் 13வது திருத்தத்தை இல்லாதொழிக்க வேண்டும். 13த் திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தவும் மாட்டோம் அதேவேளை இல்லாது ஒழிக்கவும் மாட்டோம் என்று நடுநிலையில் இருக்க முடியாது.

13த் திருத்தச் சட்டம் தொடர்பாக உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின் பிரகாரம் நான் செயற்படுகின்றேன். அதைக் கடைப்பிடித்தால், நாம் 'ஒன்றுபட்ட' அரசாக இருக்கிறோம் என்று சொல்லலாம். நான் சமஷ்டி அரசை எதிர்க்கிறேன். ஆனால் அதிகாரப் பகிர்வை அல்ல. இலங்கையில் உள்ள மாகாண சபைகளுக்கு லண்டன் நகர சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் கூட இல்லை. எனவே இதை ஒரு சமஷ்டி அரசு என்று வரையறுக்க முடியாது. மறைந்த ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தன இலங்கையை ஒரு சமஷ்டி நாடாக மாற்றக்கூடாது என சட்டத்தரணிகளுடன் இணைந்து பல சரத்துக்களை அறிமுகப்படுத்தினார். இதுவரை, ஒவ்வொரு ஜனாதிபதியும் இதை செயல்படுத்த முடிவு செய்துள்ளனர். எனவே நாம் 13ம் திருத்தத்தை அகற்ற வேண்டும் அல்லது அதை நடைமுறைப்படுத்த வேண்டும்.

காணி ஆணையம் உடனடியாக அமைக்கப்பட வேண்டும். இது தொடர்பான வரைவு மசோதா மார்ச் மாதத்திற்குள் முன்மொழியப்படலாம். ஒவ்வொரு மாகாணத்திலிருந்தும் ஒன்பது பிரதிநிதிகள் சேர்க்கப்பட வேண்டும் என்றும் 12 பேர் ஜனாதிபதியால் நியமிக்கப்பட வேண்டும் என்றும் அரசியலமைப்பு கூறுகிறது. பின்னர் தேசிய காணிக் கொள்கை வகுக்கப்பட வேண்டும். அதன் பின்னர் தேசிய காணி கொள்கையை காணி ஆணைக்குழுவினால் செயற்படுத்த முடியும்.

மாகாண பொலிஸ் ஆணைக்குழுவுக்கு பதிலாக தேசிய பொலிஸ் ஆணைக்குழு ஸ்தாபிக்கப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டால், அதற்குரிய சட்டத்திருத்தங்கள் செய்யப்பட வேண்டும். இருப்பினும், நாம் ஏதாவது ஒன்றைச் செய்ய வேண்டும். இது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகள் பெப்ரவரி 8 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். மேலும் ஏதேனும் ஆலோசனைகள் இருப்பின் அவற்றை பெப்ரவரி 4 ஆம் திகதிக்கு முன்னர் செய்து அவற்றை பரிசீலித்து பெப்ரவரி 8 ஆம் திகதி சமர்ப்பிக்கலாம்.

இங்கிருப்பவர்களோ நானோ எங்கள் நாட்டைப் பிரிக்கத் தயாராக இல்லை. இங்கு அமர்ந்திருக்கும் நாம் அனைவரும் சிங்களவர்கள். இந்த நபர்கள் சிங்களவர்களுக்கு துரோகம் செய்ய மாட்டார்கள். சிங்களவர்கள் இருப்பார்களேயானால், அவர்கள் தமிழர்கள், முஸ்லிம்கள் மற்றும் பர்கர்கள் போன்ற பிற இனத்தவர்களுடன் இணைந்து வாழ வேண்டும். நமது தேசிய கீதத்தில் "ஒரு கருணை அனைபயந்த எழில்கொள் சேய்கள்" (ஒரு தாயின் குழந்தைகள்) என்ற வரியில் உள்ள கருத்தை நாம் பாதுகாத்தால், நாம் ஒற்றுமையாக முன்னேற முடியும் என்பதில் எனக்கு எந்த சந்தேகமும் இல்லை.

அரசியல் மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு ஒருபடியாக ஒருமித்த அடிப்படையிலான தீர்வை நோக்கிச் செயல்படுவோம். நமது அரசியல், பொருளாதாரப் பிரச்சினைகளை அனைவரும் ஏற்றுக்கொள்ளும் வகையில் படிப்படியாகத் தீர்ப்போம். இந்தப் பிரச்சனையில் சிக்கிக் கொள்ளாமல் முன்பு ஒப்புக்கொண்டபடி செயல்படுவோம். நாங்கள் யாருக்கும் துரோகம் இழைக்கவோ, நாட்டை பிரிக்கவோ இல்லை, இன்று நாடு ஒன்றுபட்டுள்ளது என்றும் குறிப்பிட்டிருந்தார்.

ஜனாதிபதி ரணிலின் மேற்சொன்ன பேச்சிலிருந்து சில விஷயங்கள் தெளிவாகின்றன. முதலாவது, இனப்பிரச்சினைக்கான உடனடித்தீர்வு என்பது 13ம் திருத்தத்தின் அமுல்ப்படுத்தல் என்பதுதான். இரண்டாவது, சமஷ்டி என்பது இன்னும் "தீண்டத்தகாததாகவே" பார்க்கப்படுகிறது. மூன்றாவது, காணி, பொலிஸ் அதிகாரங்கள் 13ம் திருத்தத்தின் அமுலாக்கலின் பின்னும் கூட, மத்திய அரசின் கட்டுப்பாட்டில்தான் தொடரும். ஐந்தாவது, அரசியலமைப்பில் 37 வருடங்களுக்கும் அதிகமாக இருக்கின்ற குறைந்தபட்ச அதிகாரப் பகிர்வு ஏற்பாட்டை முழுமையாக அமுல்படுத்துவதற்கே, "நானும் சிங்களவன் தான், நான் நாட்டைக் காட்டிக்கொடுக்கமாட்டேன், நானும் சமஷ்டியை எதிர்க்கிறேன், நாம் ஒன்றுபட்ட நாடாக இருக்க வேண்டும்" என ஒரு நாட்டின் ஜனாதிபதி பேரினவாதிகளுக்கு, குழந்தையொன்றிற்குச் சாக்குப் போக்குச் சொல்வதுபோல சொல்லவேண்டியிருப்பது, இந்நாட்டில் இன்னும் பேரினவாதமும், இனவெறியும் தொடர்ந்தும் பலமாகவே இருக்கிறது என்பதைத்தான் உணர்த்தி நிற்கின்றன.


அதிகாரப்பகிர்வு விடயத்தில் 13ம் என்பது எவ்வளவுதூரம் அர்த்தமற்றது என்பதற்கு "இலங்கையில் உள்ள மாகாண சபைகளுக்கு லண்டன் நகர சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் கூட இல்லை" என்ற ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்ஹவின் கூற்றே போதுமானது. அத்தகைய மாகாண சபை முறைமையைக் கூட முழுமையாக அமுல்படுத்தத் தயங்கும் பேரினவாதிகளைக் கொண்ட நாட்டில், "சமஷ்டிக்" கோரிக்கை உடனடியாகவோ, வெகுசிலகாலத்திலோ நிறைவேறும் என்று தமிழ்த் தேசியக் கட்சிகள் தமிழ் மக்களிடம் வெற்றுக் கனவை விதைப்பதில் அர்த்தமில்லை. தமிழ்த் தேசிய அரசியலைப் பொறுத்தவரையில் இது ஒரு முட்டுச்சந்தில் முட்டி நிற்கும் நிலை. 13ம் திருத்தம் தான் தீர்வு என்பது தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் பெரும் ஏமாற்றமே!

இன்று ஆட்சியிலுள்ள அரசாங்கங்களுக்கு மாற்றாக தன்னை முன்னிறுத்தும், சமகி ஜன பலவேகயவோ, ஜே.வி. பி-யோ கூட, அதிகாரப்பகிர்வொன்றை வழங்கப்போவதில்லை. அதைப் பற்றி அவர்கள் பேசுவது என்ன, மூச்சுக்கூட விடுவதில்லை. அது அவர்கள் வாக்கு வங்கியைப் பாதிக்கும் என்று அவர்களுக்குத் தெரியும். அப்படியானால், தமிழ்த் தேசிய அரசியலின் எதிர்காலம்தான் என்ன என்ற கேள்வி எழுகிறது.

தமிழ்த் தேசிய அரசியல், "பூகோள அரசியலால்" எதையாவது சாதிக்கலாம் என்று சொல்லலாம். ஆனால் அது எப்படியென்பதை அது ஒரு போதும் சொன்னதில்லை. "அது அவர்களுக்கு மட்டுமே தெரிந்து, புரிந்த ரகசியம். 13-ஐத்தாண்டிய தீர்வொன்றிற்கு அழுத்தம் கொடுக்க வேண்டிய தேவை இந்தியாவிற்குக் கிடையாது. இந்தியாவிற்குள் எழுந்திருக்கிற அதிகாரப்பகிர்வு தொடர்பான வாதப்பிரதிவாதங்களை அவதானிக்கிற போது, இலங்கையில் அதிகரித்த அதிகாரப்பகிர்வினை இந்தியா ஆதரிப்பதானது, இந்தியாவின் உள்நாட்டு அதிகாரப்பகிர்வு பிரச்சினைகளை அதிகரிப்பதாகவே அமையும். எனவே இந்தியா அதனைச் செய்யப்போவதில்லை, மற்றைய நாடுகள் இலங்கையில் தலையிட்டு அதனைச் செய்யவைப்பதற்கும் இடமளிக்கப்போவதில்லை.

சீனா, இலங்கையின் இனப்பிரச்சினை விவகாரத்தில் தலையிடுவதேயில்லை. இங்கு, அமெரிக்காவும், மேற்கும்தான் தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் நம்பும் "பூகோள அரசியல்" மாயமந்திரம் என்றால், இன்றயை சூழலில் அவை எவ்வளவு தூரம் அதிகாரப்பகிர்விற்கு இலங்கை மீது அழுத்தம் வழங்கும் என்பது சந்தேகமே! மஹிந்த, கோட்டா, சுனில் ரட்நாயக்க, மற்றும் நேவி சம்பத் மீதான கனடாவின் தடை போன்ற சில அடையாள நடவடிக்கைகளை புலம்பெயர் தமிழ் சமூகம், மேற்கில் தமக்குள்ள அரசியல் செல்வாக்கினைப் பயன்படுத்திச் செய்யலாமேயன்றி, உடனடியாக, இன்றைய உலக அரசியல் ஒழுங்கு மற்றும் நிலவரத்தை வைத்துப்பார்க்கையில், அதிகாரப்பகிர்வு தொடர்பில் இலங்கையைக் கட்டாயப்படுத்த முடியாத நிலைதான் இருக்கிறது.

ஆகவே, இன்று தமிழ்த் தேசிய அரசியல் முன்னால் ஒரு பெரிய சவால் காத்திருக்கிறது. ஒன்றில் 13-ஐ இறுகப் பிடித்து, உள்ளதை வைத்து தமிழ்த் தேசத்தின் நலனை தம்மாலியன்றளவுக்கு முன்னேற்ற முயல்கிற, அரசியலை தமிழ்த் தேசிய முயலலாம். அதற்கு ஆட்சித்திறன் மிக்கவர்கள் தேவை. அல்லது வழமைபோலவே பகட்டாரவாரக் கோரிக்கைகளை முன்வைத்துக்கொண்டிருக்கும், போராட்டம், பேரணி, கறுப்புக்கொடி என உணர்வெழுச்சி அரசியலை தொடர்ந்து முன்னெடுக்கலாம். அதற்கு இப்போதுள்ளவர்களே போதும்.



## வாழ்வியல் தரிசனம்

எல்லாத் தேவைகளும் ஆடம்பரம் நிறைந்ததாக இருந்தாலும் கூட, கடவுளிடம் ஏகப்பட்ட கோரிக்கைகளை ஒன்றன்பின்னர் ஒன்றாக மனிதர்கள் வைக்கின்றார்கள்.

கடவுளிடம் இலஞ்சம் தருவதாகப் பேரம் பேசுவதுபோல், 'இந்த வேலையை முடித்துத் தந்தாய் என்றால், பல இலட்சம் செலவில் தர்மகாரியங்கள், பூஜைகள் செய்வேன்' எனப் பெரிய வேண்டுதல்களைச் செய்வார்கள்.

சகல உயிர்களையும் காக்கும் தெய்வத்தை, வியாபாரம் செய்வதுபோல் அறியாமையில் பேசும் நபர்கள் சுயநலமுடைய அறிவிலிகள்.

நேர்மையுடன், பக்தியுடன் வேண்டுவதற்கும் ஆணவத்துடன் 'இதைத் தா, நான் செய்வேன்' என வேண்டுவதற்கும் நிறைய வித்தியாசம் உண்டு. இரண்டாது வெட்கப்பட வேண்டிய முறையாகும். கடவுளிடம் பக்தியுடன் எதைக் கேட்டாலும் கேட்காது விட்டாலும், கடவுள் கிருபை செய்தபடியேதான் இருக்கின்றார் என்பதில் ஏது ஐயம்?

எதையும் செய்யாமல் சோம்பித் திரிபவர்கள், குடும்பத்தினரைக் கண்டுகொள்ளாமல் மனம்போன போக்கில் சுற்றித் திரிந்து, அறவழி நடக்காதவர்களை எவர்தான் விரும்புவார்?

எதையாவது பெறத்தான் விரும்பும் சிலர், கொஞ்சமாவது மக்களை நேசிக்கும் பண்பை ஏன் கண்டுகொள்வதில்லை? மனிதன் தனித்தவன் இல்லை; சகலருடனும் இணைந்து செயலாற்ற வேண்டியவன்.

பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### யானைகளைக் கட்டுப்படுத்துங்கள்

முல்லைத்தீவு, தென்னியங்குளம் கிராமத்தில் யானைகளைக் கட்டுப்படுத்துவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

விவசாயத்தை முழுமையாக நம்பி உள்ள இக்கிராமத்தில் யானைகளினால் பயிர் அழிவுகள் ஏற்பட்டு வருவதாகவும் குறிப்பாக நாள்தோறும் தென்னியங்குளம் அணைக்கட்டு வழியாக கூடுதலாக வருகை தரும் யானைகள் குளத்தின் அணைக்கட்டினையும் சேதப்படுத்தி வருவதாக கிராம மக்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, வனஜீவராசிகள் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட யானை வெடிகளுக்குக் கூட அஞ்சாமல் காட்டு யானைகள் பயிர் அழிவுகளை ஏற்படுத்தி வருவதாகவும் கிராம மட்டத்திலும் பிரதேச செயலக மட்டத்திலும் நடைபெறுகின்ற கூட்டங்களில் யானைகளைக் கட்டுப்படுத்துவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்த போதிலும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும் மக்கள் குற்றஞ்சாட்டினர்.

அத்துடன், துணுக்காயின் அமதிபுரம், ஆரோக்கியபுரம், அம்பலப்பெருமாள்குளம், கோட்டைக்கட்டியகுளம், உயிலங்குளம், புத்துவெட்டுவான், பழையமுறிகண்டி, ஐயன்கன்குளம், தேராங்கண்டல் ஆகிய கிராமங்களின் மக்களும் யானைகளைக் கட்டுப்படுத்தும்படி துணுக்காய் பிரதேச செயலகத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

நடராசா கிருஸ்ணகுமார்

புதுடெல்லி

# இரட்டை இலைக்கு இன்று விசாரணை

அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்தின் (அ.தி.மு.க) தலைமை பதவியை கைப்பற்றுவது யார்? என்பது தொடர்பாக எடப்பாடி பழனிசாமிக்கும், ஓ.பன்னீர் செல்வத்துக்கும் இடையே ஏற்பட்ட மோதலை தொடர்ந்து கடந்த ஆண்டு ஜூலை 11 ஆம் திகதி அ.தி.மு.க. பொதுக்குழு கூட்டம் நடைபெற்றது.



இந்த கூட்டத்தில் எடப்பாடி பழனிசாமி அ.தி.மு.க. இடைக்கால பொதுச்செயலாளராக தேர்வு செய்யப்பட்டார். ஓ.பன்னீர்செல்வம் கட்சியில் இருந்து அதிரடியாக நீக்கப்பட்டார். இதனைத் தொடர்ந்து சென்னை உயர்நீதிமன்றத்தில் ஓ.பன்னீர்செல்வம் தொடர்ந்த வழக்கில் மாறுபட்ட தீர்ப்பு வெளியானது.

தனி நீதிபதி முதலில் அளித்த தீர்ப்பு ஓ.பன்னீர்செல்வத்துக்கு ஆதரவாகவும், 2 நீதிபதிகள் பின்னர் அளித்த தீர்ப்பு எடப்பாடி பழனிசாமிக்கு ஆதரவாகவும் இருந்தன. இந்த தீர்ப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் ஓ.பன்னீர்செல்வம் தொடர்ந்த வழக்கு விசாரணை இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது.

இந்த நிலையில், ஈரோடு கிழக்கு தொகுதிக்கு இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளதை அடுத்து , இரு அணிகளும் தனித்தனியாக போட்டியிடப் போவதாக அறிவித்துள்ளன. இதனால் அதிமுகவின் இரட்டை இலை சின்னம் முடங்கும் சூழல் உருவாகியுள்ளது. இரு அணிகளும் வேட்பாளர்களை அறிவிக்கவில்லை. இருந்த போதிலும் இரு அணிகளும் தேர்தல் பணிக்குழுக்களை அமைத்து, தேர்தலுக்கான பணிகளை தொடங்கிவிட்டன.

இந்த நிலையில் இரட்டை இலை சின்னத்தை தங்களுக்கு ஒதுக்க கோரி இடைக்கால தீர்ப்பு அளிக்க வேண்டும் என பழனிசாமி தரப்பு உச்ச நீதிமன்றத்தில் முறையிட்டது. இந்த இரண்டு வழக்குகளும் இன்று (30) திங்கட்கிழமை விசாரணைக்கு வருகிறது. இதனால் அரசியல் களத்தில் பலத்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தி இருக்கிறது.

புதுடெல்லி

## 2 போர் விமானங்கள் நடுவானில் மோதின

இந்திய விமானப் படையின் 2 போர் விமானங்கள் நடுவானில் மோதியதில் ஒரு விமானி உயிரிழந்தார். 2 விமானிகள் பாராசூட் உதவியுடன் உயிர் தப்பினர். மரங்கள் மீது விழுந்த அவர்கள் படுகாயங்களுடன் மீட்கப்பட்டனர்.



மத்திய பிரதேசத்தின் குவாலியரில் இந்திய விமானப் படை தளம் உள்ளது. அங்கிருந்து மிராஜ்-2000 ரக போர் விமானமும், சுகோய்-30 ரக போர் விமானமும் சனிக்கிழமை (28) காலை வழக்கமான பயிற்சிக்காக புறப்பட்டன. மிராஜ் விமானத்தில் ஒரு விமானியும், சுகோய் விமானத்தில் 2 விமானிகளும் இருந்தனர்.

குவாலியர் அருகே முரைனா பகுதியில் 2 போர் விமானங்களும் ஒரே திசையில் அருகருகே பறந்தபோது எதிர்பாராதவிதமாக உரசி மோதின. இதில் மிராஜ் விமானத்தில் தீப்பிடித்தது. சுகோய் விமானத்தில் ஓர் இறக்கை சேதமடைந்தது.

தீப்பிடித்த மிராஜ் விமானம் முரைனா மாவட்டம், பாகர்கார் கிராமத்துக்கு அருகே உள்ள வனப்பகுதியில் விழுந்து நொறுங்கியது.

லக்னோ

## மகன் இறந்ததால் மருமகளை மனைவியாக்கிய முதியவர்



உத்தரபிரதேச மாநிலத்திலுள்ள கோரக்பூர் என்ற மாவட்டத்தில் ஒரு சுவாரஸ்யமான சம்பவம் ஒன்று நடந்துள்ளது.

சாபியா உம்ராவ் கிராமத்தைச் சேர்ந்த 70 வயதானவருக்கு திருமணமாகி நான்கு குழந்தைகள் உள்ளனர். அவருடைய மனைவி இறந்துவிட்டார். இதனைத்தொடர்ந்து இவரது மூன்றாவது மகனும் சில ஆண்டுகளுக்கு முன்பாக உயிரிழந்து விட்டார்.


இந்நிலையில் இவர் தனது 28 வயதான மருமகளை சமீபத்தில் கோவிலில் வைத்து திருமணம் செய்துக் கொண்டார். இந்த திருமண புகைப்படங்கள் சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

இருவரும் பரஸ்பர சம்மதத்துடன் திருமணம் செய்து கொண்டதாகவும், தனது புதிய உறவில் மகிழ்ச்சியாக இருப்பதாகவும் முதியவர் கூறியுள்ளார்.

சென்னை

## முறையற்ற காதலுக்கு அந்தரங்க செயலி

“கள்ளக்காதல்" விவகாரம், உலகம் முழுவதும் பரவி உள்ளது. இது தொடர்பான வன்முறைகளும், குற்றங்களும், பெருகி வந்தபோதிலும், கள்ளக்காதலை தடுக்க முடிவதில்லை. இது தொடர்பாக ஒரு வித்தியாசமான செய்தி தெரிவிக்கப்பட்டுள்ளது.



என்ன அது? முறையற்ற காதல் அதாவது கள்ளக்காதலுக்காகவே ஒரு வெப்சைட் இருக்கிறது என்றால் உங்களால் நம்ப முடிகிறதா? ஆம்.. அதன்பெயர் க்ளீடன்.

அந்தரங்க செயலி என்றும் சொல்லலாம். மனம்விட்டு பேச, குமுறலை கொட்ட, பிடித்த விஷயங்களை பகிர்ந்துகொள்வதற்காகவே, ஒரு ஆப் உருவாக்கப்பட்டுள்ளது.

புதுசு புதுசாக இந்த க்ளீடனை நாடி செல்லும் யூசர்களின் அளவும் அதிகரித்து வருகிறதாம். கிட்டதட்ட 66 சதவீதம் பேர் நாட்டின் முன்னணி நகரங்களில் இருந்து வருபவர்கள்தானாம்.

அதாவது, 20 லட்சம் இந்தியர்களில் 66 சதவீதம் பேர் வளர்ந்த நகரங்களை சேர்ந்தவர்கள் ஆவர். 44% பேர் 2ம் கட்ட நகரங்களை சேர்ந்தவர்களாம். மேலும், இந்த ஆப்பில் பெரும்பாலான யூசர்கள் ஹைகிளாஸ், அதாவது, உயர்ந்த சமூக - பொருளாதார சூழலில் இருந்து வந்தவர்கள்தான் என்றும், க்ளீடன் தகவலை வெளியிட்டுள்ளது.

புதுடெல்லி

## திருமண நிகழ்வில் புதிய மாற்றங்கள்

நாட்டின் பெரிய மாநிலங்களில் உத்தர பிரதேசம் முக்கிய மாநிலமாக உள்ளது. பாரம்பரியம், கலாசாரத்துக்கும் பெயர் பெற்ற இந்த மாநிலத்தில் திருமண நிகழ்ச்சிகள் பெரும்பாலும் குளிர்காலத்தில் நடைபெறுகிறது. இதில் ஆண்டுதோறும் மாற்றங்கள் இடம்பெறுவது உண்டு.

அந்த வகையில் கடந்த நவம்பரில் தொடங்கிய திருமணக் காலத்தில் வர்ணனையாளர்கள் முக்கியத்துவம் பெறத் தொடங்கி யுள்ளனர். வழக்கமாக விழா மேடைகளிலும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் இடம்பெறும் இவர்கள் தற்போது திருமண வரவேற்பு நிகழ்ச்சிகளிலும் இடம்பெறத் தொடங்கியுள்ளனர்.

உ.பி. திருமணங்களில் கையில் ஒலிபெருக்கியுடன் ஆண் அல்லது பெண் வர்ணனையாளரை பார்க்க முடிகிறது. சில திருமணங்களில் இருவரும் கூட மாறி, மாறி நிகழ்ச் சியை தொகுத்து வழங்குகின்றனர். மேடையில் மணமக்களை வாழ்த்த வரும் விருந்தினர்கள் பற்றியும் இவர்கள் சில வார்த்தைகள் கூறி மகிழ்விக்கின்றனர்.



மதுரை

## “அட்ஜஸ்ட் பண்ணிக்கோ": கணவன்

மதுரை திருப்பாலை, சேர்ந்த 25 வயதான பெண்ணொருவர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றை செய்துள்ளார்.



திருமண நாள் அன்று அவருக்கு ஆண்மை குறைபாடு உள்ளது என்பது தெரியவந்தது. வேறு வழியின்றி அவருடன் குடித்தனம் நடத்தி வந்தேன்.

இதை சாதகமாக பயன்படுத்தி கொண்டு கணவனின் அண்ணன்,, எனக்கு பாலியல் தொல்லை கொடுத்து வருகிறார். எனவே, நான் இது தொடர்பாக என் கணவரிடம் புகார் செய்தேன்.

அப்போது அவர், “என் சகோதரரை கொஞ்சம் அனுசரித்து நடந்து கொள்" என்று சொன்னார். அதற்கு மறுத்துவிட்டேன். எனினும், என்னை பட்டினி போட்டு கொல்ல பார்க்கிறார்கள் என்றும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஜப்பான் அரசாங்கத்தின் அன்பளிப்பு

**சிறுவர்களின் தொடர்ச்சியான சுகாதார மேம்பாட்டினை இலக்காகக்கொண்டு ஜப்பான் அரசாங்கத்தின் நிதியுதவியின் கீழ் ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட walk-in cold rooms எனும் குளிரூட்டப்பட்ட அறைகள் மற்றும் போசாக்கு வழங்கல்கள் சுகாதார அமைச்சிடம் கையளிக்கப்பட்டன.**




இவ்வாறு கையளிக்கப்பட்ட உபகரணத்தொகுதிகளில் 13 குளிரூட்டப்பட்ட அறைகள், அதாவது அதிவெப்பநிலை உணர்திறனுடைய தடுப்பூசிகளை பாதுகாப்பாக அதிகளவில் வைத்திருக்க முடியுமான பெரிய குளிர்சாதனப் பெட்டிகள் இருக்கின்றன. இவை கொழும்பு மாவட்டத்திலும், பிராந்திய மருத்துவ வழங்கல் கிளைகளான கம்பஹா, களுத்துறை, காலி, கண்டி, கேகாலை, அநுராதபுரம், இரத்தினபுரி மற்றும் பதுளை மாவட்டங்களிலும் பொருத்தப்பட்டுள்ளன.

2021 ஆம் ஆண்டில் சுகாதார அமைச்சிற்கு ஏற்கனவே 3 மில்லின் அமெரிக்க டொலர் பெறுமதியான எடுத்துச் செல்லத்தக்க தடுப்பூசிக் கொள்கலன்கள் மற்றும் வெப்பநிலைக் கண்காணிப்பு மானிகள் உள்ளடங்கலாக பல்வேறு குளிர்ச் சங்கிலி உபகரணத் தொகுதிகள் வழங்கப்பட்டன. அவற்றின் ஒரு பகுதியே அண்மையில் வழங்கி வைக்கப்பட்டுள்ள இவ் உபகரணங்களாகும். இவை நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிப்பது மாத்திரமன்றி தடுப்பூசிகளை பாதுகாப்பாகவும் சிறப்பாகவும் களஞ்சியப்படுத்துவதற்கும் தேவைப்படும் எல்லா இடங்களிலும் கிடைப்பதற்கும் வழிசெய்யும்.

அத்துடன், இவற்றுக்கு மேலதிகமாக சிறுவர்களின் பராமரிப்புக்கு உடனடியாகத் தேவைப்பட்ட நுண்ணூட்டச் சத்துக்களைத் கொள்வனவு செய்வதற்கும், ஊட்டச்சத்துக் குறைபாடு மற்றும் ஏனைய நோய்களைக் கண்டறிவதற்கு பரிசோதனைகளை நடாத்தி தேவையான ஆலோசனை மற்றும் வழிகாட்டல்களை வழங்குவதற்குமென 500,000 அமெரிக்க டொலர் நிதிப்பங்களிப்பு வழங்கப்பட்டதோடு அதன் ஒரு பகுதியே இப்போசாக்கு வழங்கல்களாகும்.

இந்நிகழ்வில் உரைநிகழ்த்திய இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் மிசுகொஷி ஹிதேகி குறிப்பிடுகையில், “முழு நாட்டிலும் தேவையுடனுள்ள மக்கள் அனைவருக்கும் நோய்த் தடுப்புச் சேவைகள் சமமாக கிடைப்பதை உத்தரவாதப்படுத்துவதற்கான “Last One Mile Support” எனும் செயற்றிட்டத்தின் ஒரு பகுதியாக Walk-in Cold Rooms எனும் குளிரூட்டப்பட்ட அறைகளை வழங்குவதற்கு கிடைத்த வாய்ப்புக்காக நாம் பெருமைப்படுகிறோம். அத்துடன், இவ் உபகரணத்தொகுதி கொவிட்-19 உள்ளடங்கலாக மகப்பேற்று மற்றும் சிறுவர் சுகாதாரத் தடுப்பூசிகளின் களஞ்சியப்படுத்தல் மற்றும் எடுத்துச்செல்லல் திறனை மேம்படுத்துமென்றும், நாடு தற்போது எதிர்கொள்கின்ற பொருளாதார நெருக்கடி நிலையிலும் இலங்கையின் சுகாதாரப் பாதுகாப்பு முறைமையைப் பலப்படுத்துவதற்கு உதவுமெனவும் நாம் நம்புகிறோம்.

மேலும், நாட்டின் பொருளாதார நெருக்கடி காரணமாக துரித விலையேற்றம் மற்றும் இறக்குமதிப் பொருட்களின் தட்டுப்பாடு போன்ற காரணங்களால் நிலையான ஊட்டச்சத்து கிடைக்காத அதிகமான சிறுவர்களுக்கு இப் போசாக்குப் பொதி சிறந்த தீர்வாக இருப்பதுடன், போசாக்கு வழங்கல்களும் தரமான ஆலோசனைகூறலும் மிகவும் மோசமான ஊட்டச்சத்துக் குறைபாட்டினால் பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்களுக்கு ஓரளவு நிவாரணமாக இருக்கும்” என்றும் குறிப்பிட்டார்.

“நோய்த்தடுப்பு முறைமையில் முதலீடு செய்வதனூடாக, குறிப்பாக குழந்தைகளுக்குக் கிடைக்கும் பயன்கள் தெளிவானவை. கொவிட்-19 தொற்று நோய் போன்ற தடுப்பூசியினால் தடுக்கக்கூடிய அவசரகால நிலைமைகளை வெற்றிகரமாக எதிர்கொள்ளக்கூடிய திறன் உள்ளடங்கலாக வழமையான நோய்த்தடுப்புச் சேவைகளில் இலங்கையின் பாரிய முயற்சிகளை மேலும் முன்னேற்றுவதற்கு இவ்வுபகரணத்தொகுதி உதவும்” என ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தின் இலங்கைக்கான பிரதிநிதி கிறிஸ்டியன் ஸ்கூக் தெரிவித்தார்.

சிறுவர்களின் குறுகியகால, நீண்டகால தேவைகளுக்கு தீர்வுகாண்பதற்காக ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியமும் சுகாதார அமைச்சும் இணைந்து மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு ஜப்பான் அரசாங்கம் பாரிய பங்களிப்புக்களை வழங்கியுள்ளது.

SLT–MOBITEL இன்

# “துணிவுடன் கனவுகளை நனவாக்குங்கள்”

SLT-MOBITEL, 2023 ஆம் ஆண்டை வரவேற்று, அனைத்து இலங்கையர்களுக்கு எதிர்காலத்தை நோக்கி பயணிப்பதற்கு வலுவூட்டும் வகையில், “துணிவுடன் கனவுகளை நனவாக்குங்கள்” (‘Be Brave Dream Big’) எனும் தொனிப் பொருளை அறிமுகம் செய்துள்ளது. கொழும்பிலுள்ள ஸ்ரீ லங்கா ரெலிகொம் தலைமையகத்தில் இந்த அறிமுக நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.



நிகழ்வை ஆரம்பிக்கும் வகையில் குழும தவிசாளரினால் தேசியக் கொடி ஏற்றப்பட்டதுடன், ஒவ்வொரு நிறுவனங்களின் பிரதம நிறைவேற்று அதிகாரிகளால் அந்நிறுவனங்களின் கொடிகள் ஏற்பட்டனர். தேசிய கீதம் இசைத்ததைத் தொடர்ந்து, நிறுவனத்துக்கும் ஊழியர்களுக்கும் ஆசி வேண்டி சமய வழிபாடுகள் இடம்பெற்றன. நிகழ்வின் போது சிரேஷ்ட முகாமைத்துவத்தைச் சேர்ந்தவர்களால் ஊக்குவிப்பு புத்தாண்டு உரைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

தினசரி தங்கியிருக்கும் திறனிலிருந்து, தூர நோக்குடைய மாற்றங்களுக்காக வாடிக்கையாளர்களை உயர்ந்த மட்டத்துக்கு கொண்டு செல்வதற்கு பங்களிப்பு வழங்க SLT-MOBITEL எதிர்பார்க்கின்றது. புதிய தொனிப்பொருளினூடாக, நிறுவனத்தின் பிரத்தியேகமான உறுதிமொழி மற்றும் 22 மில்லியன் கனவு காண்போருக்கான பரம்பல் போன்றன உள்வாங்கப்பட்டுள்ளதுடன், தமது சொந்த வெற்றியை நோக்கி பயணிப்பதற்கு அவர்களை தயார்ப்படுத்துவதில் பங்களிப்பு வழங்குவதாகவும் அமைந்துள்ளது. புரட்சிகரமான தொழில்நுட்பம் மற்றும் சாதனங்களுடன், SLT-MOBITEL புத்தாக்கமானதாகவும், பின்பற்றக்கூடியதாகவும், புதிய உலகை வாடிக்கையாளர்கள் எய்துவதற்கு ஊக்குவிப்பதாகவும் அமைந்துள்ளது.

வாடிக்கையாளர்கள் மற்றும் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் பின்பற்றுவதற்கு உதவிகளை வழங்கி, புதிய போக்குகளுக்கமைய அவர்களை செயலாற்றி, சுபீட்சமடையச் செய்வதற்காக, புதிய தீர்வுகள் இந்நிகழ்வில் அறிமுகம் செய்யப்பட்டிருந்தன.

அதிவேக, தங்கியிருக்கக்கூடிய இணைப்புத்திறன் போன்றன முன்னரை விட அதிகளவு முக்கியத்துவம் வாய்ந்துள்ளதை புரிந்து கொண்டு, SLT-MOBITEL இனால் 200 Mbps வரை மேம்படுத்தப்பட்ட புரோட்பான்ட் வேகங்கள் பாவனையாளர்களுக்கு வழங்கப்படுகின்றன. புதிய மெய்நிகர் உலகில் இயங்க உதவவும், அடுத்த அலை டிஜிட்டல் புரட்சியை ஏற்படுத்தும் வகையிலும், SLT-MOBITEL இனால் ‘Traverse’ ஊடாக இலங்கையின் முதலாவது immersive metaverse அனுபவம் வழங்கப்படுகின்றது. வாடிக்கையாளர்களால் மெய்நிகரான கட்டமைப்பில் கவர்ந்திழுக்கும் பகுதிகள், சலுகை வழங்கல்கள் மற்றும் பெருமளவான வாய்ப்புகளை அனுபவிக்கக்கூடியதாக இருக்கும்.

வாஷிங்டன்

# அமெரிக்கா சீனாவுக்கு இடையில் 2025 இல் போர் வெடிக்கும்



அமெரிக்கா - சீனா இடையே பயங்கரமான போர் ஒன்று 2025-ம் ஆண்டு நிச்சயம் நடைபெறும் என்று அமெரிக்க விமானப்படை தளபதி கூறியிருப்பது பெரும் சலசலப்பையும், பீதியையும் ஏற்படுத்தியுள்ளது.

தைவான் மீது படையெடுப்பதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் சீன அதிபர் ஜி ஜின்பிங் செய்து வருவதாக தகவல் வெளியாகி வரும் நிலையில், அமெரிக்க விமானப்படை தளபதியின் இந்தக் கருத்து முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

தைவான் மட்டுமல்லாமல் அமெரிக்காவின் நெருங்கிய நட்பு நாடான இந்தியாவை, சீனா தொடர்ந்து சீண்டி வருவதும் அமெரிக்காவை போரில் இறங்க வைக்கும் என சர்வதேச அரசியல் பார்வையாளர்களும் தெரிவித்துள்ளனர்.

போரை விரும்பும் சீனா தனி நாடாக விளங்கும் தைவானை நெடுங்காலமாக சீனா சொந்தம் கொண்டாடி வருகிறது. எப்படியாவது தைவானை சீனாவுடன் இணைக்க அந்நாட்டு அதிபர் ஜி ஜின்பிங் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வந்தார். ஆனால், அமெரிக்கா, பிரிட்டன் போன்ற வல்லரசு நாடுகள் தைவானுக்கு பக்கபலமாக இருப்பதால் அந்நாட்டை நெருங்க சீனா தயக்கம் காட்டி வந்தது.

தைவான் விவகாரம் ஒருபுறம் இருக்க, இந்தியாவையும் அவ்வப்போது சீனா சீண்டி வருகிறது. இந்தியாவுக்கு சொந்தமான லடாக், அருணாச்சலப் பிரதேசத்தை கைப்பற்றும் முயற்சியில் அந்நாட்டு இராணுவம் பல முறை முயற்சி செய்தது. ஆனால், இந்திய இராணுவத்தினரின் தீரத்திற்கு முன்னால் சீனப்படையினரால் தாக்குப்பிடிக்க முடியவில்லை. லடாக்கிலும் சரி, அருணாச்சலப் பிரதேசத்திலும் சரி, தொடர்ந்து இந்தியாவிடம் குட்டு வாங்கி ஓடுவதே சீனாவுக்கு வாடிக்கையாகி விட்டது.

அமெரிக்கா பகிரங்க எச்சரிக்கை இந்நிலையில், தைவான் மீது போர் தொடுக்க சீனா முயற்சித்தால் அதற்கு முன்னதாக எங்கள் இராணுவத்தை சீனா எதிர்கொள்ள வேண்டும் என அமெரிக்கா சமீபத்தில் பகிரங்கமாக எச்சரித்திருந்தது.

இந்த சூழலில், அமெரிக்க விமானப்படை தளபதிகளில் ஒருவரான ஜெனரல் மைக் மினிஹான், தனது தலைமை தளபதிக்கு கடந்த ஆண்டு பெப்ரவரி 1 ஆம் திகதி ஒரு கடிதம் எழுதியுள்ளார். அந்தக் கடித விவரங்கள் இப்போதுதான் வெளியாகியுள்ளன.

அதில் அவர், “நான் நினைப்பது தவறாக கூட இருக்கலாம். ஆனால், என் உள்ளுணர்வு ஒன்றை சொல்கிறது. அது, அமெரிக்கா - சீனா இடையே 2025-ம் ஆண்டு ஒரு மிகப்பெரிய பயங்கரமான போர் நடக்கும் என்பதுதான்" எனக் கூறியுள்ளார்.



பாகிஸ்தான்

## மர்ம நோயால் 18 பேர் உயிரிழந்தனர்

பாகிஸ்தானில் சிந்து மாகாணத்தின் தலைநகரும், அந்த நாட்டின் மிகப்பெரிய நகருமான கராச்சியில் கெமாரி என்கிற கிராமம் உள்ளது. கடந்த சில நாட்களாக இந்த கிராமத்தில் உள்ள மக்கள் மர்ம நோயால் பாதிக்கப்பட்டனர். குறிப்பாக சிறுவர்கள் அதிக அளவில் பாதிப்புக்குள்ளாகினர்.

இப்படி மர்ம நோயால் பாதிக்கப்பட்டு ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டவர்கள் சிகிச்சை பலனின்றி அடுத்தடுத்து உயிரிழந்தனர். கடந்த 10 நாட்களுக்குள் 18 பேர் உயிரிழந்தனர்.

இவர்களில் பெரும்பாலனோர் சிறுவர்கள் ஆவர். அதே போல் 3 சிறுவர்கள் உள்பட ஒரே குடும்பத்தை சேர்ந்த 6 பேரும் உயிரிழந்தவர்களில் அடங்குவர். காய்ச்சல், தொண்டை வீக்கம் மற்றும் மூச்சுத் திணறலால் அவர்கள் இறந்ததாக குடும்பத்தினர் தெரிவித்தனர்.

இந்த நிலையில், சில ரசாயனங்களால் நுரையீரல் பாதிப்பு ஏற்பட்டு மரணங்கள் நிகழ்ந்தது முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளதாக சிந்து மாகாணத்தின் சுகாதாரத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஆர்ஜென்டினா

## வீடுகளை பந்தாடிய பந்து மழை

தென் அமெரிக்க நாடான அர்ஜெண்டினாவில், டென்னிஸ் பந்து அளவில் வானிலிருந்து விழுந்த பனிக்கட்டிகளால் கடுமையான சேதம் ஏற்பட்டுள்ளது.



சான் லூயிஸ் மாகாணத்தில் அண்மையில் சூறாவளிக் காற்றுடன், ஆலங்கட்டி மழையும் பெய்துள்ளது. இதன் போது வானில் இருந்து விழுந்த டென்னிஸ் பந்து அளவிலான ஐஸ் கட்டிகளால் வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார்கள், வீடுகளின் மேற்கூரைகள்-ஜன்னல்கள், விளை நிலங்கள் என்பன சேதமடைந்தன.

அதேசமயம் இவ் ஆலங்கட்டி மழையால், வீதியில் நடந்து சென்றவர்களும் காயமடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் சான் லூயிஸ் மாகாணத்தில் செம்மஞ்சள் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வொஷிங்டன்

## கரடியையும் விடாத ‘செல்பி’ மோகம்

அமெரிக்காவின் கொலராடோ மாகாணத்தின் வடக்கு பகுதியில் உள்ள போல்டர் நகரில் 46,000 ஏக்கர் பரப்பளவில் மிகப்பெரிய உயிரியல் பூங்கா அமைந்துள்ளது.

இங்கு விலங்குகளின் நடமாட்டத்தை கண்காணிப்பதற்காக 9 ‘மோஷன் டிடெக்டிங்’ கமெராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. இந்த கமெராக்கள் விலங்குகள் கடந்து செல்லும் போது



புகைப்படங்கள் மற்றும் சிறிய வீடியோக்களை பதிவு செய்யும். பொதுவாக விலங்குகள் உணவு மற்றும் ஓய்வெடுக்கும் இடங்களைத் தேடி செல்லும்போது கமெராக்களில் பதிவாகும்.

இஸ்லாமாபாத்

## “எங்கள் நாட்டின் வளத்திற்கு அல்லாவே பொறுப்பு”

“கடுமையான பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் பாகிஸ்தானின் வளத்திற்கு அல்லாவே பொறுப்பு” என்று அந்நாட்டு நிதியமைச்சர் இஷாக் தர் பேசியுள்ளார்.

இஸ்லாமாபாத்தில் ஒரு நிகழ்ச்சியில் பேசிய பாகிஸ்தான் நிதியமைச்சர் இஷாக் தர், “பிரதமர் ஷெபாஸ் ஷெரீஃப் தலைமையில் நாட்டின் நிதி நிலைமையை மேம்படுத்த நாங்கள் தொடர்ந்து முயற்சித்து வருகிறோம். இப்போது உள்ள நிதி சிக்கல்களுக்கு வழி வகுத்தது என்னவோ இதற்கு முன்பு இருந்த இம்ரான் கான் தலைமையிலான அரசு. இப்போது அந்தப் பிழையின் விளைவை சரி செய்ய இரவு பகலாக நாங்கள் போராடிக் கொண்டிருக்கிறோம். முந்தைய ஐந்து ஆண்டுகள் ஆட்சியில் இருந்தவர்கள் செய்த அழிவுதான் இது




என்பது மக்களுக்கும் தெரிந்துவிட்டது. அல்லாவால் பாகிஸ்தானை உருவாக்க முடிந்தது. அதனால் பாகிஸ்தானை பாதுகாத்து, வளர்த்து, வளத்தைத் தருவதையும் அல்லாவே செய்வார்” என்றார்.



அவுஸ்திரேலிய பகிரங்க டென்னிஸ் தொடர்:

# சம்பியனான சபலெங்கா

அவுஸ்திரேலியாவில் நடைபெற்று வந்த அவுஸ்திரேலிய பகிரங்க டென்னிஸ் தொடரில் உலகின் ஐந்தாம் நிலை வீராங்கனையான அர்ய்னா சபலெங்கா சம்பியனானார்.

நேற்று முன்தினமிரவு நடைபெற்ற இறுதிப் போட்டியில் கஸக்ஸ்தானின் எலெனா றைபகினாவை எதிர்கொண்ட பெலாரஸின் சபலெங்கா 4-6 என்ற ரீதியில் முதலாவது செட்டை இழந்தபோதும், 3-6, 4-6 என்ற செட் கணக்கில் அடுத்த இரண்டு செட்களையும் வென்றே சம்பியனானார்.

ஜேர்மனிய புண்டெலிஸ்கா தொடர்:

## மியூனிச்– பிராங்க்:ஃபேர்ட் போட்டி சமநிலையில்

ஜேர்மனியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான புண்டெஸ்லிகா தொடரில், தமது மைதானத்தில் நடைபெற்ற ஐன்ரச்ட் பிராங்க்ஃபேர்ட்டுடனான போட்டியை 1-1 என்ற கோல் கணக்கில் நடப்புச் சம்பியன்களான பயேர்ண் மியூனிச் சமப்படுத்தியது.

மியூனிச் சார்பாகப் பெறப்பட்ட கோலை லெரோய் சனே பெற்றதோடு, பிராங்க்ஃபேர்ட் சார்பாகப் பெறப்பட்ட கோலை றன்டல் கோலோ முவானி பெற்றிருந்தார்.

புண்டெஸ்லிகா புள்ளிகள் பட்டியலில் 37 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் மியூனிச் உள்ளதுடன், யூனியன் பேர்லின் 36 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் உள்ளதுடன், மூன்றாமிடத்தில் ஆர்.பி லெய்ப்ஸிக் 35 புள்ளிகளுடன் உள்ளது. நான்காமிடத்தில் எஸ்.சி பிரைபேர்க் 34 புள்ளிகளுடன் உள்ளது.



## டொட்டென்ஹாம் செல்லும் லுக்காக்கு?

இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான செல்சியின் முன்களவீரரான றொமெலு லுகாக்குவை கைச்சாத்திட இன்னொரு பிறீமியர் லீக் கழகமான டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பர், நியூகாசில் யுனைட்டெட் என்பன முயல்வதாகக் கூறப்படுகிறது.

இத்தாலிய சீரி ஏ கழகமான இன்டர் மிலனிலிருந்து கடனடிப்படையில் தற்போது செல்சியில் 29 வயதான வயதான லுக்காக்கு விளையாடி வருகிறார்.

விபுலானந்த கல்லூரி விளையாட்டுப் போட்டியின்

## மரதனோட்டப் போட்டியில் வென்ற ஜெபர்சன், திலக்சனா



ஆர். ஜெயஶ்ரீராம்

கல்குடா கல்வி வலயத்துக்குட்பட்ட பேத்தாழை விபுலானந்த கல்லூரி தேசிய பாடசாலையின் வருடாந்த மெய்வல்லநனர் இல்ல விளையாட்டு போட்டியை முன்னிட்டு ஆண்கள், பெண்களுக்கான மரதனோட்டப் போட்டியானது பாடசாலை சமூகத்தின் ஒத்துழைப்புடன் கல்குடா வாழைச்சேனை பிரதான வீதியில் நேற்று நடைபெற்றது.

ஆண்கள் பிரிவில் க. ஜெபர்சன் என்ற மாணவனும், பெண்கள் பிரிவில் திலக்சனா என்ற மாணவியும் முதலாமிடத்தனைப் பெற்றனர்.

இம்மாத இறுதியில் ஏனைய மைதான விளையாட்டு நிகழ்வுகளும் அடுத்த மாதம் 19ஆம் திகதியன்று சைக்கிள் ஓட்டப் போட்டியும் நடைபெறவுள்ளது.

இவ்வாண்டு மாணவர்களின் விளையாட்டு திறன்களை திறமையான இடத்துக்கு கொண்டு சென்று தேசிய மட்டம் வரை சென்று வெற்றி பெறவேண்டும் என்பதற்கான நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு செயற்படுவதாக கல்லூயின் அதிபர் சி. முருகவேல் தெரிவித்தார்.

## பரிஸ் ஸா ஜெர்மைனிலிருந்து விலகும் நவாஸ்?



பிரெஞ்சு லீக் 1 கால்பந்தாட்டக் கழகமான பரிஸ் ஸா ஜெர்மைனின் கோல் காப்பாளரைக் கைச்சாத்திடுவதற்காக இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான நொட்டிங்ஹாம் பொரெஸ்டுக்கும், பரிஸ் ஸா ஜெர்மைனும் பேச்சுவார்த்தைகள் இடம்பெறுவதாகக் கூறப்படுகிறது.

36 வயதான நவாஸை கடனடிப்படையில் கைச்சாத்திட பொரெஸ்ட் முன்மொழிந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

பரிஸ் ஸா ஜெர்மைனில் ஜல்லூயிஜி டொன்னருமாவுடன் நவாஸ் கோல் காப்பாளருக்காக போட்டியிடுகின்ற நிலையில் நடப்புப் பருவகாலத்தில் இரண்டு போட்டிகளிலேயே விளையாடியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை 30 ஜனவரி 2023, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.